உ
கணபதிதுணை.

வித்யாபாநு.

"கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க வதற்குத் தக"—(திருக்குறள்)

தொகுதி கo. Vol—X.	காளயுக்திவூ ஐப்பசி மீ NOVEMBER 1918.	பகுதி கo. No. 10.

ஸ்ரீ:

கல்வியைப்பற்றிய சில அபிப்பிராயங்கள்.

கல்வியைப்பற்றிப் பத்திரிகைகளெல்லாம் பிரமாதமாக எழுதிக்கொண்டுவருகின்றனவென்றாலும், அமெரிக்கரும் பிரித்தானியரும் அதன் விஷயமாகக் கவனம் செலுத்தி உழைத்து வருவது நமது நாட்டில் இன்னும் தகுந்தபடியான உழைப்பு அதில் செலுத்தப்படவில்லை, என்று கருதுகிறோம். கல்வியினால் உண்டாகும், பிரயோஜனங்கள் உண்டியும் உடையும் வீடும் தோட்டமும் தாம் என்னும் நினைவுடன் நின்று போகாமல், கல்வியினால் தேசத்துக்கே பொதுவான பல நன்மைகள் பல உண்டாக இருக்கின்றன என்பதையும் அவசியம் நினைவில் வைத்துக்கொள்ளவேண்டும்.

ஒருதேசத்தின் பெருமையெல்லாம் அந்தத்தேசத்துக்கு மாணவர்களையே எதிர்நோக்கி நிற்கின்றனவென்பதையும், இப்போது பள்ளிக்கூடம் போய்வரும் மாணவர்கள் பிற்போது தேசாபிமானிகளாக வரவேண்டுமென்பதையும், அவர்களே தேசத்தை நல்ல ஏற்றத்தில் கொண்டுவரத்தக்க பாத்தியமுடையவர்கள் என்பதையும், அவர்கட்கு நல்லமுறையில் கல்விகொடுக்கப்பட்டாலே தேசம்நல்லவாழ்வை

யடையும் என்பதையும், அது தவறினால் தேசம் கலக்கமடையும் என்பதையும் எத்தனை முறை திரும்பத்திரும்பச் சொன்னாலும் மிகை யாகாதென்று எண்ணுகிறோம். ஏனெனில் நல்ல கல்விமுறை அத்தனை அவசியமானது. ஒரு தேசத்தினுடைய பிற்போக்கானது கல்வி முறையையே எதிர்பார்த்திருக்கின்றது என்பது யாவரும் திருப்தியுடன் ஒப்புக்கொள்ளத் தக்கதொன்றே யாகும்.

மேல்நாடுகளில், இன்றும் கல்வியின் சீர்திருத்தத்தைப் பற்றிய புதிது புதிதான கொள்கைகளைத் தக்க ஆசிரியர்கள் புத்தகரூபமாக வெளியிட்டுக்கொண்டு வருகின்றார்கள். பெற்றோர்களும் கல்விச்சங்கத்தாரும் அவற்றையநுசரித்து நடத்தமுயலுகிறார்கள் அத்தகைய பிரசுரங்களேனும் வாதங்களேனும் நமதுநாட்டில் விசேடித்து வெளிவரக்காணோம். யாரேனுஞ் சிலர் எழுதப் புகுந்தால், கண்டனங்கள் வரத்தவருதில்லை. உபாத்தியாயர்களது சங்கத்திலும் இதனைப்பற்றி நிஷ்கரிஷையான தீர்மானங்களை ஆலோசித்து முடிக்க முயலகிறார்களில்லை.

தற்காலத்து போதனாமுறையின் முக்கியமான குறைகளுள், மாணவர்கள் தாய்ப்பாஷையை நன்கு கற்கவேண்டியகாலத்தில் அன்னிய பாஷையைப் படிக்கும்படியாக நேர்ந்திருப்பது மொன்றாகும். ஒரு எழுவயதுப் பையன் தனக்குக் கொஞ்சமேனும் எவ்விதத்திலும் பரிசயமில்லாத ஆங்கிலப்பாடத்தை வைத்துக்கொண்டு நெட்டுருவேற்றி ஞாபகத்தில்வைத்திருக்கப் பிரயத்தனப்படுவதைப் பார்ப்பது சர்வசாதாரணமாக இருக்கின்றது. அந்தவயதில் அவனுக்குத் தன் தாய்ப்பாஷையில் சிறிது பயிற்சிக்குமேல் இல்லாமலிருப்பதையும் கவனிப்பது அத்தன்மையதே. இச்செயல்தான் நமது ஸ்வபாஷாக்கிரந்தங்களின் பெருமையையும் ஆவசியகத்தையும் அடியோடு அழுத்திக்கொண்டு வருகின்றது. சொந்தபாஷை நூல்களைக்கெடுப்பதாவது, சொந்த மதவுணர்ச்சி, சொந்ததேச உணர்ச்சி இவற்றால் உண்டாக வேண்டிய தேசாபிமானம் வீரம் இவற்றை மாணவர்க்குச் சிறிதேனும் பற்றவிடாமற் செய்கின்ற செயலன்றோ? அந்நூல்களைப் படிக்க நேர்ந்தாலன்றோ நமது தேசத்துப் பூர்வீகரது பெருஞ்செயல்களும் நம்தேசத்துப் பூர்வீகநாகரிகமும் மாணவர்க்குப் புலனாகும்?

அன்னிய பாஷையைக் கற்றுக்கொடுக்கும் முறையை அமெரிக்கரும் ஆங்கிலரும் எம்முறையில் அவலம்பித்திருக்கிறார்களென்னும் விஷயத்தை இங்கே ஞாபகப்படுத்துதல் இன்றியமையாததேயாகும். தாய்ப்பாஷையில் மாணவர்க்குத்தன்னறிவு தோன்றிய பிறகே அன்னிய பாஷையில் அவர்களைப் பிரவேசிக்கச் செய்வதேயொருபிடிவாதமாக ஆங்கிலரும் அமெரிக்கரும் கொண்டிருக்கின்றனர்.

அன்னிய பாஷையைக் கற்றுக்கொடுக்கவேண்டாமென்றாவது அதனுட் கிடக்கும் நுட்பங்களை யறிந்து ஆனந்திக்கவேண்டாமென்றாவது, அதனுள்ளே இதுவரையில் காணப்பெறாத அதிசயங்களிலிருந்து அச்செயல்களைப் பின்பற்றவேண்டுவது அவசியமாக இருந்தால், பின்பற்றவேண்டாமென்றாவது, அதனால் அறிவு விசாலமடையாது. என்றாவது மறுத்துச்சொல்வார் இருக்க நியாயமில்லை; ஆனால், தனது சொந்தபாஷையிலும், அப்பாஷையிலக்கியங்களிலும் தானே புகுந்து பிறருடைய உதவியில்லாமலே தாராளமாகச் செல்லக்கூடிய பக்குவம் வந்தபிறகு மாணவர்கள் அன்னியபாஷையிலும், அதன் இலக்கியங்களிலும் நுழைந்தார்களாயின் இரண்டிற்குமுள்ள ஏற்றத் தாழ்வைக் கவனித்துச் செல்வதுடன், தனக்கும் தன்கூட்டத்தாருக்கும் தன் தேசத்துக்கும் ஏற்றவகையான உத்தம தர்மங்களோ அத்தர்மங்களை நடத்தும் முறைகளோ அதனுட்காணப்படுமாயின் அவற்றைப் பின்பற்றித் தனது தேசதர்மத்துக்கு மாறுபடாமல் நடப்பவனாவான். இல்லையானால், இக்காலத்து மாணவர் படும்பாட்டைத்தானடைவான். இக்காலத்து மாணவர்களிடம், வம்புப்பேச்சல்லாத காரியப் பேச்சாக உற்றார் உறவினர் பேசவந்தாராயின், அவர்க்குச் சரியான பதிற்சொல்ல இயலாதவராகி, "O, these are all nonsence qucations" என்று சொல்லிப்போய்விடுகின்றார்கள். தமது சொந்த பாஷை இலக்கியங்களில் இருக்கும் அதிசயங்களையும் ஆனந்தங்களையுங்காணக் கண்ணில்லாமல், அன்னியபாஷை நூல்களைப்பற்றி வியந்து கூறுவது, "மாதாவயிறெறிய மகேசுவர பூஜைசெய்யும் இயல்பினையொத்திருக்கின்றதேயன்றி வேறில்லை.

ஒரு உத்தம உபாத்தியாயருக்கும் ஒருபடிப்பாளிக்கும் இருக்க வேண்டிய செய்கைகளில் முக்கியமானது என்னவென்றால், மாணவனுடைய இருதயத்தில் உயர்ந்த எண்ணங்களைப் புகச்செய்து அவனது மனம் உயர்ந்த காரியங்களில் வளைந்துகொடுக்கக்கூடியபடி அவனைப் பக்குவப்படுத்தவேண்டியதேயாகும். ஒர்ட்ஸ் ஓர்த் என்னும் ஆங்கிலக் கவி சொல்லுகிறபடி "குழந்தையே மனிதனுக்குத் தகப்பன்" ஆகிறான்; ஆகையினால் அவனைத் திருத்தினாலல்லாமல் தேசம் திருந்தாது. அவன் திருந்தாவிடில், திருத்தமுள்ள தேசமும் பின்னர்ச் சீர்குலையும். உயர்ந்த எண்ணங்களுடன் ஒரு மாணவன் பாடசாலையிலிருந்து வெளிவந்தானாகில், அவன் உண்மைமனிதனாகத் தேறி, தன்னை யாவரும் நிறையுடையவனாக மதிக்க நின்று, உண்மையான தேசாபிமானத்தையடைந்து, தனது உற்றாருக்கும் ஊராருக்கும் உபகாரியாக நடந்து தனது நாட்டிற்கே கண்ணென மதிக்கப்பெறுவான்.

இராமன் சிவாஜி முதலானவர்களுடைய சரித்திரங்களும் சீதை பத்மினி முதலானவர்களுடைய ஒழுக்கங்களும் படித்த ஆண்களும் பெண்களும் வீரத்தையும் தர்மத்தையும் பெற்று உயரமாட்டார்களென்றால், அன்னியநாட்டுச் சரித்திரப்படிப்பினால் மாத்திரம் உயர்வு அடைவரென்பது சொல்லளவேயாகி நிற்கும். இராமசரித்திரம் படித்தவர் உயர்ந்ததர்மமுடையவர்களாக ஆகியே தீரவேண்டும். சிவாஜி சரித்திரத்தைக் கேட்டவரும் வீரராகித்திரும்பியேயாகவேண்டும். சீதையின் மனதைப்படித்தவர் மனவுறுதியையும் கற்பின் மகிமையையும் நிலைநாட்டவே செய்வர். பத்மினியைப் படித்தவர் தேசாபிமானமும் வீரமும் பெண்பாலர்க்கும் எத்துணைஅவசியகமானது என்று நினைத்தே நிற்பர். இவர்போன்ற எத்தனையோ வீரர்களையும் தர்மவான்களையும் கற்பரசிகளையும் பற்றிநமது பண்டைநூல்களில் விவரமாகவும் விஸ்தாரமாகவும் கேட்கிறோம்; படிக்கிறோம்; படிப்பிக்கிறோம். சுருங்கச்சொல்லப்புகின், இத்தகைய சரித்திரங்களே ஒரு இந்தியனை உண்மை இந்தியனுக்குமேயன்றி, அன்னிய சரித்திரங்கள் ஒருகாலும் ஒருஇந்தியனைப் பரிஷ்காரமான இந்தியனாகச் செய்யமாட்டா என்பது திண்ணம். அன்னிய சரித்திரங்கள் பெரும்பான்மை மேடைகளில் நின்று ஆடுவதற்கும் சிறுபான்மை தர்மங்களில் உதவுவதற்கும் ஆகலாம்.

மாணவர்க்குச் சிறுபோதிலிருந்தே வீரமும்தர்மமும் இத்தகைய வென்பதைச் சொல்லி, அவற்றைப் பழகிவரவும் பயிற்றவேண்டும். இளமைப்பிராயமே இந்த உயர்ந்த கொள்கைகளைப் பதிக்கவேண்டிய காலம். இளமையிற் பயிலாத விஷயம், அந்த ஜன்மத்தில் பயிற்சிக்குவராது. ஒருகால் ஜன்மமளவும் பிரயத்தனப்பட்டால் அடுத்த பிறவியில் தான் பயன்றரும். " புதிய அரக்குத்தான் உருவத்தைத் திருத்தமாக அச்சடித்துக்காட்டும்; இளம்பிராயந்தான் உத்தமகாரியங்களை வாங்கிக்கொண்டு பின்னர் நிறைவேற்றும் என்று ஒரு ஆங்கிலக்கவிவாணர் சொல்லி யிருக்கிறார் என்று கேட்டதுண்டு.

மாணவர்க்குப் போதனைமுறையில் கவனத்தை யிழுப்பது, உபாத்தியாயருடைய அன்பினால் மாத்திரம் ஆகுமேயன்றி அடியினாலும் உதையினாலும் ஆகாது. உபாத்தியாயரிடம் மாணவர்க்கு அன்பில்லாமல், பயமும் வெறுப்பும் தோன்றிற்றேயானால், அவ்வுபாத்தியாயர் வகுப்பில் அவர் பொருட்டுக் கதறுவதெல்லாம் கடலோசையாகவே முடியும் அன்புகொண்டுள்ளவன், உபாத்தியாயரது உபதேசம் ஒழுக்கமிவற்றைப்பின்பற்றித் தேறிவருவான். ஒரு குழந்தைக்குப் படிப்பை பயத்தைக் காட்டினும் அன்பே ஊட்டுகின்றதென்பது உண்மையான விஷயமன்றோ?

ஆதிகுருகுலவாஸங்களில், பயத்தினாலும் கட்டாயத்தினாலும் படிப்பு சொல்லிக்கொடுக்கப்படவில்லை. அன்பும் ஆசையுமே அடிப்படையாக இருந்தன. அக்காலங்களில் ஒவ்வொரு மாணவனுடைய ஒழுக்கமும் உறுதியும் கவனிக்கப்பட்டே போதனைமுறைகள் செலுத்தப்பட்டன.

மேற்சொல்லப்பட்டவைபோன்ற ஒழுங்குத்தவறுபாடுகளே இந்திய மாணவரது, ஆத்ம சக்தியை நிர்மூலமாக்கி ஆண்மையையழித்துப் பரீக்ஷை பரீக்ஷை யென்னும் பயத்தையே நிலைபெறச்செய்கின்றன. இந்தப்பயம், அவரை விளையாட்டினும் உணவினும் உறக்கத்தினும் பின்தொடர்ந்தே சென்று அவர்களைப் பயங்காளிகளாகவே உருவாக்கிவிடுகின்றது. ஆகலின், வித்யாதிகாரிகளும் போதகாசிரியர்களும் மாணவர்க்குரிய முறையைப் பின்பற்ற வேண்டுமென்று பிரார்த்திக்கின்றோம்.

பத்திராதிபர்.

ஸ்ரீ:

முயற்சி.

....

முயற்சி என்பது முயல் என்ற பகுதியும், சி என்ற தொழிற்பெயர் விகுதியும் பெற்றுவந்ததோர் தொழிற்பெயர். அஃது ஊக்கமெனப் பொருள்படும். எத்துணைப் பெருஞ்செயல்களாயினும் அவற்றையோர் பொருட்படுத்தாது சோம்பலின்றியும் மனச்சோர்வின்றியும் வலிந்துகோடற்கு அது சிறந்ததோர் தூண்டுகோலாம். இதுபற்றியன்றோ தெய்வப்புலமைவாய்ந்த நமது மூதாட்டியாகிய ஔவைப்பிராட்டியார் 'ஊக்கமது கைவிடேல்' எனமொழிந்துள்ளார். இதன்பொருள் என்னையெனின் செய்தொழிலில் மனஞ்சோராமையை நீ ஒருபொழுதும் கைவிடாதே என்பதாம். அஃதெவ்வாறெனின் தன்னாற்சாதிக்கக்கூடாத காரியங்கள் அனைத்தையும் எவ்விதமாயினும் அவற்றை முடிக்கவேண்டுமென்ற ஓர் அவா (அஃதாவதூக்கம்) இருக்குமாயின் எளிதின் முடித்துக்கொள்ளலாம். இன்னும் முயற்சியுடையார் இகழ்ச்சியடையார் என்றோர் சிறியமொழியும் உலகிற் பயின்றுவருவதையறியலாம். ஒருதொழிலைச் செய்யவேண்டுமென்ற ஊக்கத்தையுடையார் ஒருகாலத்தும் அத்தொழில் முற்றாமைக்குரிய விலக்கணத்தை யடையாரென்று அதிற்றெற்றென வுரைத்திருப்பது அங்கை நெல்லிக்கனிபோல விளங்கும். எக்காலத்தும், மகளிரினும் ஆடவர்க்குள்ள சிறப்பையாராயின் செய்தற்கரிய செயலைத்தொடங்கி இடையில்வரும் இடையூற்றினையோராது அது முற்றும்வரையிலும் முயன்று முடித்துக்கொள்வதொன்றேயாகும். இதற்கிணங்க பொய்யாமொழிப்புலவரும்,

அருமையுடைத்தென் றசாவாமைவேண்டும்
பெருமை முயற்சிதரும். எனக்கூறியிருக்கின்றனர்.

முயற்சி தன்னையுடைய ஒருவனுக்குப் பயனையளிப்பதன்றி அவன் முன்னோரையும் சிறப்பிக்கவல்லது இனி மனமுயற்சி

சரீரமுயற்சி என மேற்கூறியமுயற்சி இருவகையினையுடைத்து. அவற்றுள் முற்கூறியதாவது ஒருகாரியத்தை மனத்தானே நிறுவிக்கொள்வதாகும் பிற்கூறியதாவது காயத்தானே பாடுபட்டு ஒரு விஷயத்தை சாதித்துக்கொள்வதாகும். அவற்றானிரனிரை வகையானே கடவுட்டியான முதலியவைகளையும், பொருள் புகழ் முதலியவைகளையும் பெறலாம். ஆகையால் இம்மை மறுமைக்குரியனவற்றை யடைவதற்கு முக்கிய சாதனமாயிருப்பது ஒருவனுக்கு முயற்சியைவிட வேறேதேனுமுளதோ, இவ்விருவகை முயற்சிகளில் பூவோடு கூடிய நாறு மணம் பெற்றாற்போல மனமுயற்சியோடு ஒருங்கு கூடினால் மாத்திரம் சரீரமுயற்சி பயன்படுவதல்லால் தனியாகப் பயன்படாது இதனானே மனமுயற்சியே சிறந்ததென்பது பெற்றாம். மிகுந்த திரவியத்தையுடையனா யிருந்தபோதினும் முயற்சி யில்லாதிருப்பின் அப்பொருள் அவனுக்கும் பயன்படாதொழியும்

பொருளில்லாதிருப்பினும் முயற்சியுடையாருக்குச் சகல ஐசுவரியங்களுந் தாமே வந்து கூடும்.

மானிடனொருவன் றனக்கருஞ்செல்வம் வாய்க்கவேன் றனுதினமுயற்சி
தானுஞ்ற்றுவனேற் கடவுளுமதனைத் தந்தளிக்குவன தாலன்றே
வானபோறிஞர் திருவினைமுயற்சி யாக்குமம் முயற்சியிலாமை
யினமாரின்மை புகுத்திடுமோவென் றியாருநன் குணர்தா நவில்வார்.

(குசேலோபாக்கியானம்)

செயத்தகு முயற்சிசெய்திடிற் செயிர்தீர் செய்யவண் மணாளனுமிரங்கி
வியத்தகுவேண்டு மியாவையுமளிப்பன் விளம்புறு முயற்சி செய்யானேல்
நயத்தகு போகமளித்திடா னென்று நானிலத்தறிஞர் நன்குரைப்ப
உயத்தகுநெறிமா லடியனலென்றே யோர்ந்தமாதவப் பெருங்கடலே.

(குசேலோபாக்கியானம்)

ஒன்றிற்குச் செய்யவேண்டிய முயற்சியிற்குறைவுறாது செய்துகொண்டுவந்தால் ஈசனுமதற்குத் தக்கபலனளிப்பானென்பதூஉம் பிறவும் ஈண்டுகாட்டிய விவ்விருவருஞ்செய்யுட்களானே யறியக்கிடக்கின்றன.

இன்னும்,

முயற்சி திருவினையாக்கு முயற்றின்மை
யின்மை புகுத்திவிடும்.

என்ற, குறளே இதற்குப்போதிய சான்றாகும்.

ஆக்குமறிவானலது பிறப்பினான்
மீக்கொளுயர்விழிவு வேண்டற்க என்பதற்கிணங்க.

எக்குடியிற் பிறப்பினும் யாவரேயாயினு முயற்சியுடையராயின் அவர் எல்லாராலும் நன்கு மதிக்கப்படுவார். எத்தகைய வுயர் குடும்பத்தில் ஜனித்தாலும்,

திங்களும் மீன்ற திரள்கா லுளையலரி
தேங்கமழ் நாற்ற மிழந்தா அங்—கோங்கு
முயர்குடி யுட்பிறப்பி னென்னும் பெயர் பொறிக்கும்
பேராண்மை யில்லாக் கடை.

(நாலடியார்)

என்றவாறே முயற்சி யில்லாதார்க்குப், புகழும் முன்னேறுவதற்கு மற்றெவ்விதமான வழியுங்கிடையா. முயற்சியுடையார் எத்தொழிலைச் செய்யினு மிகுந்த சிரத்தையுடன் செய்து அதில் யாதொரு குற்றமுண்டாகாமற் றடுத்துக்கொள்வர்.

இக்கலியுகத்தின்கண்ணே பொருளுடையார்க்குச் சகலகாரியங்களும் எளிதின் முடியும் முக்கியமாகப் பொருளை யாதாரமாகவுடையன புண்ணிய முதலியவைகள். அப்பொருள், முயற்சியை யாதாரமாகவுடையது.

நிற்க முயற்சியிலார் அஃதாவது சோம்பேறிகள் நம்மாலாகக் கூடியதொன்றுமில்லை. எல்லாமாம் எனையாட்கொள்ளுமீசன் செயலென்று சொல்லிக்கொண்டு திரிவர். அன்னோருக்கேதேனுமோரிடருற்றால் எல்லாமவன் செயலென்பது கனவுபோலாகித் தேம்பித் தேம்பித் தேயங்தோறுஞ் சுற்றித் திரிவதை நாம் இன்றும் எங்குங் காணலாம்.

கடவுளீ ருவனென் றெண்ணிக் கருதுறு முயற்சி செய்யானே
வடலுறு செல்வம்வந் தடைகுவனேகொ லருங்கலத் திட்டபா லடிசின்
மிடலுடைக்கரத்தாலெடுத்துணுதெங்ஙன்வீங்கும் வெம்பசிப்பிணியொழிப்பன்
உடல்பவன் றனக்கோ ராகரமாகு முடனனி வாட்டுமெய்த் தவத்தோய்.

(குசேலோபாக்கியானம்)

மேற்கூறிய சோம்பேறிகள் இச்செய்யுளிலுட் கருத்தை யாரா யின் நன்கு விளங்கிக்கொள்வார்கள். இன்னுமவர்கள் தங்கள் வஸ்திரங்களையே நன்றாகத்தோய்த்து உடுத்துக்கொள்வதற்கே மிகுந்த வருத்தத்தை யடைந்து கடைசியாகச்சிரங்கு முதலியவியாதிகளாற் பீடிக்கப்பட்டுத் துன்புறுகின்றனர். பெரியோர் ஒருவிஷயத்தைச் செய்வதென்று தீர்மானித்துவிட்டால் அது முடிவடையும் வரையில்,

மெய்வருத்தம் பாரார் பசிநோக்கார் கண்டுஞ்சார்
எவ்வெவர் தீமையும் மேற்கொள்ளார்—செவ்வி
அருமையும் பாரார் அவமதிப்புங் கொள்ளார்
கருமமே கண்ணா யினார். என்றபடி

லக்ஷியத்திலேயே கண்ணாயிருப்பர்.

தெய்வத்தா னாகா தெனினும் முயற்சிதன்
மெய்வருத்தக் கூலி தரும்.

என்ற குறளீண்டவசியங் கவனிக்கத் தருந்தது. முயன்றவினையால் வகையாற் கருதிப் பயனைத் தாராதாயினும் முயற்சி தனக்கிடமாய உடம்பு வருந்திய வருத்தத்தின் அளவு கூலிதரும் என்பது பொருளாகும். 'ஆகாதெனினும்' என்ற உம்மையானே தெய்வத்தானுயவழித்தன்னளவின் மிக்க பயனைத் தருமென்பது பெற்றாம்.

இனி மற்றொரு சான்றாகக் "கைகாய்த்தால் கமுகுகாய்க்கும்" என்று வழங்கிவரும் பழமொழியைக் கவனித்தால் முயற்சி எத்தன்மையுடைத்து என்பதைத் தெள்ளிதிலுணரலாம். பாக்குமரத்திலிருந்து பயனையடைய விரும்பினல் கையிற்காய்ப்புண்டாகும்படி தண்ணீரிறைத்தாலல்லாது அதன் பயனைப் பெறமுடியாது. இது

போலவே ஒவ்வொரு விஷயத்திலும் ஊக்கமிருக்கவேண்டியதவசியமாகும். கழனிகள்எவ்வளவுக்கெவ்வளவுகளைகளையப்படுகின்றனவோ அவ்வளவுக்குத்தக்கபயனளிக்கும் என்பதுயாவருமறிந்ததேயாகும். கற்றுணர்ந்தவொருவன் தானறிந்த விஷயங்களை அடிக்கடி சிந்தனை செய்யாவிடின், அவைகள் அவனுக்கு ஏட்டுச்சுரைக்காய் போற் பயனற்றனவாகிவிடும். கல்லாவொருவன் ஒரேவிஷயத்திற் பல்காற் பயின்றானாயின், அதில் அவனை வெல்வதரிதாய் விடும். இதற்குக் காட்டாக உழுந்தெண்ணிக் கல்விகற்ற குடஉழுந்துப் புலவரை எடுத்துக்கொள்ளலாம். இன்னும் தேவிகோட்டையிலிருந்த வன்றொண்டப்புலவரை எடுத்துக்கொள்ளலாம். எழுத்தின்வாசனையறியாத இவ்விருவரும் தங்கள் தங்கள் முயற்சியானன்றோ பெரும் புலவரென யாவரானும் நன்கு மதிக்கப்பட்டிருந்தனர். புதுக்கோட்டை இராதாகிருஷ்ணையரவர்களும் ஜஸ்டிஸ் முத்துசாமிஐயரவர்களும் சிறப்படைந்த தெவ்வாறெனின், அது அவர்கள் சரித்திரங்களை யாராயின் நன்குவிளங்கும்.

மார்க்கண்டனென்ற பக்தன் புவியிற் பெரும்புகழடைந்ததும் அதிக ஆயுளையடைந்ததும், சாவித்திரியென்பவள் தன்னுபகனுக்குற்ற விபத்தை நீக்கிக்கொண்டதும், காட்டிலே நாயகனை யிழந்த தமயந்தி மீண்டும் நளனை அடைந்ததும், விசுவாமித்திரமகாரிஷி புதிய உலகம் சிருட்டித்ததும், தனது பிதாவினாற் புறக்கணிக்கப்பட்டதுருவன் மேற்பதவியடைந்ததும் இம்முயற்சியானன்றி வேறு புகல்வதற்காமோ! நிற்க.

ஜப்பான் முதலிய தேசங்கள் எவ்வாறு முன்னேறி இருக்கின்றன?

வீடாது தனுவிற் செயுமுயற்சி மென்மேற் பொருளை மிகவளர்க்கும்
கெடாது சுற்ற கட்பினர்தங் கிளையுந் தாங்கும் யாவர்க்குந்
தடாத வுபகா ரமும்புரியும் தடந்தா மரையா ளையுஞ்சேர்க்கும்
படாதலூழ் வந்திகொாறும் பயனே விளைக்கும் பழியின்றாம்.

(குசேலோபாக்கியானம்)

என்ற பாசுரத்தின் கருத்தை யாராய்ந்தல்லவா முன்னேறி இருக்கின்றன! புண்ணிய பூமியாகிய நந்தாய் நாடு அவைகளைப் போல் ஏன் முன்னேறக்கூடாது? மற்றெல்லாத்தேயங்களிலுமிருக்கிற வசதிகளுக்கு நம்மிந்தியா எந்த விதத்தில் குறைவாயிருக்கிறது? எல்லாவற்றிற்கும் மேம்பட்டிருந்ததல்லாமல் எந்தவிதத்திலும் எக்காலத்தும் தாழ்வுற்றதில்லை. இவ்விஷயத்தைப் பற்பல நூல்களின் வாயிலாயறிலாம்.

அங்ஙன முன்னேறுவதற்குவேண்டிய உபகரணங்கள்யாவை? இது முன் எந்தநிலையிலிருந்தது? என்பவற்றைச் சற்றுஆராயுங்கள். மனிதனுக்கேற்பட்டிருக்கிற நேரத்தில் அரைக்கணமேனும் வீண்பொழுதுபோக்கத்தக்கதன்று. ஒருதேசம் உன்னதபதவியையடைய வேண்டுமானால், கல்வி யின்றியமையாதது. மற்றை நாடுகளோடு இந்தியாவை ஒப்பிட்டுப்பார்த்தபொழுது கல்வியில் இதுமிகக்குறைந்திருக்கிறதென்று பன்முறை பெரியோர்கள் அறிக்கையிட்டிருக்கின்றனர். எல்லாவளங்களும் நிரம்பிய இந்நாட்டில் கல்வி, ஏன் எங்கும்பரவக்கூடாது? அதற்குக் காரணம் ஒற்றுமை யின்மையும் முயற்சியின்மையுமேயாகும்.ஜனத்தொகையதிகரித்த இத்தேசத்தில் எல்லோரும் ஒருமனதாக இவ்விஷயத்தைக் கண்ணுங்கருத்துமாயுற்று நோக்கின், நம்தேயம் முன்னேறுவதற்குச் சற்றும் ஐயமுண்டோ?

ஆக்கமிங் கொருவரா லணுக வேண்டுமேல்
ஊக்கமுண் டாவரே லுறுவ ரன்னது
நீக்கமில் கொள்கையி னிற்பரே யெனின்
மேக்குறு பெருந்திரு விரைவின் மேவுமால். (கந்தபுராணம்)

என்றுரைத்திருப்பது பொய்யாகுமோ? இதுகாறும் கூறியவற்றான் முயற்சியே எல்லாவற்றிற்கும் காரணமாயுள்ளதென்பது சொல்லாமலே விளங்கும். ஆகையால் எல்லோரும் இம்முயற்சியை என்றும் விடாது கடைப்பிடித்தொழுகுமாறு எல்லாம் வல்ல இறைவன்றிருவருளை மனமொழி மெய்களால் வேண்டிக்கொள்ளுகின்றனன்.

சுபம்!

G. இராமஸாமி ஐயங்கார்,
க. வி. கலாசாலை உதவியுபாத்தியாயர், கோனுபட்டு.

எப்பொழுது வேதாந்தம்? எதற்காக வேதாந்தம்?

—:×:—

எப்பொழுது வேதாந்தம் எதற்காக வேதாந்தம் என்ற வினாக்கள் வந்தால் எல்லாக் காலத்திலும் எல்லாவற்றிலும் வேதாந்தம் தானென்று சொல்லாமல் இயலாது. ஆனால் உலகத்தில் "குட்டி வேதாந்தம் குடியைக்கெடுக்கும்" (மூன்று வைராக்கியங்களில் ஒன்றான புராணவைராக்கியம் தீவிரமாய் இல்லை. அதனால் துன்பம்) என்னும் பழமொழியைச்சிலர்—அதிலும் நமது மூதாதையர்கள்—ஆதாரமாகக்கொண்டு தங்கள் சிறுவர் சிறுமிகள் கோயில் குளம் சத்சங்கம் முதலியவைகட்கு ஏகத்தொடங்கின்,— 'வந்தது அனர்த்தம்—விவாகம் இல்லாதகுறையால் அல்லவா?' வென்றுநினைத்து—நமது ஆதிசங்கரரைத் துங்கபத்திரைநதியில் முதலைபிடித்துக்கொண்டபோது, 'பிள்ளைபிழைத்தால் போதும், சந்நியாசியாயிருந்தாலும் சரி' யென்று சொன்ன தாயார்போல்—தமது பிள்ளைகள் வேதாந்தியாய்ப் போய்விடுவரோவென்ற கலக்கம் கொண்டவர்களாய்ப் பிள்ளைகள் தங்களிடம் இருக்கவேண்டிக் குலம் கோத்திரம் விசாரியாமலும் விவாகம் செய்ய முயலுகிறார்கள். அந்தோ! இவர்களைப்பற்றி என்ன சொல்வது? இவர்கள் நினைவால் சந்நியாசிதான் வேதாந்தம் படிக்கவேண்டுமென்றும் மற்றவகுப்பார்கள் படிக்கக்கூடாதென்றுமல்லவோ ஏற்படுகிறது. கிழத்தனம் மேலிட்டுத் தேகமெல்லாம் நொந்து வியாதியால் தேகம்மாறிய அப்பொழுது தான் வேதாந்தம் படிக்கவேண்டுமென்று பிறருக்குக்காட்டுகிறார்கள். கைவல்லியம் ஞானவாசிஷ்டம் முதலிய நூல்களை வாசிக்கத்தொடங்கும்போது, ஒன்றும் தெரியாமல் தூக்கம் மேலிட்டுத் தலையணைக்குப்பதிலாக அப்புத்தகங்களை வைத்துக்கொண்டு தூங்குகிறகாலமோ வேதாந்தம் ஓதும் காலம்! அன்றிக் கிழத்தனம் வரைக்கும் இருப்போமென்ற எண்ணமோ இவர்களுக்கு? "இன்றைக்கு இருப்பாரை நாளைக்கு இருப்பர் என்று எண்ணவோ இடமில்லை" இரண்டுகண்களும் விழியாமலும் பொழுதுபோக்க வழிதெரியாமலும் இருந்து எத்தனைநாள் சொல்லிவந்தாலும் கேட்டுக்கொண்டு இருக்கக்கூடிய

வனை திரிதராட்டிரனுக்குக் கீதையைச் சொல்லாமல், பகவான், அண்ணன் தம்பிமார் சண்டையில், "இவரோ அவரோ ஜயிப்பவர்" என்ற சந்தேகத்தினால், 'எல்லாரையும் கொல்வதினால் பாவ மேலிட்டு நரகத்திற்குப்போவேனென்று சொல்லித் தன் சுதர்மத்தைச் செய்யாது ஓடின அர்ச்சுனனைப்பிடித்து இழுத்து, கீதோபதேசம் செய்தது ஏனோ? யார் அறிவார் அவர் கருத்தை? சிலர் பொறுக்கமுடியாத துக்கத்தில் ஆழ்ந்தவுடன் தற்கொலை செய்துகொண்டதைக் கேட்டிருக்கிறோம். அக்காலத்தில் விவேகத்தை அடையாமல் கொலைசெய்து கொள்ளுதலானது, தற்கொலையினால் இனிவரும் துன்பங்களை அறியாத தன்மையாற்போலும்! கொலை செய்தால் பாவமென்றும், அதனால் பலதீவினைகளை இகத்திலாவது பரத்திலாவது அநுபவிக்க நேரிடுமென்றும், சந்திரசூரியர் உள்ளவரையில் நரகத்தில் வசிக்கவேண்டுமென்றும் சாஸ்திரங்கள் கதறுகின்றன. இவையும் வேதாந்தத்தின் கொள்கைகளே யன்றோ? கொலை மகாபாவம். அதிலும் தற்கொலை கொடிது. கொடிது. உலகத்தில் கஷ்டப்படாதவர்கள் யார் இருக்கிறார்கள்? சீதாதேவியானவள் நாயகனை விட்டுப்பிரிந்து கஷ்டப்பட்டாலும் ஆத்ம நாசத்தைத்தேடிக்கொள்ளக்கூடாதென்ற எண்ணத்தால் அல்லவா வெகுகாலம்வரை பொறுத்தாள். மற்றவர்கள் ஒரு நிமிஷம் சகிப்பார்களா?

ஓய்ந்தநேரமென்று நாம் நினைத்துக்கொண்டிருக்கிற சமயத்தில் வேதாந்தம் பார்க்கிறதில்லையென்றும், இந்தக்கர்ம பூமியில் பிறந்த மனிதர்களுக்குப் பெரும்பாலும் கஷ்டநிஷ்டூரங்கள் ஆதிமுதல் கடைசிவரையில் வருகிறபடியால் அந்தந்த காலங்களில் இகத்திற்கும் பரத்திற்கும் ஒப்ப எப்படிநடந்துகொள்வதென்பதை உபதேசிப்பதுதான் வேதாந்தமென்றும், வேதாந்தத்தை இதனால் எக்காலத்திலும் கையாண்டுவரவேண்டுமென்றும் ஊஹிக்கவேண்டும். சிலர் எவ்வளவுதான் வேதாந்தமானது நமது முன்னோர்களால் சிலாகிக்கப்பட்டு வந்தபோதிலும், தற்காலம் அதாவது, 20-ம் நூற்றாண்டில் தொடங்கியதான நவீன நாகரீகத்திற்கு வயப்பட்டு, அனாத்மா மிகவும்தேர்ச்சியடைந்திருக்கிற இக்காலத்திற்கு வேதாந்

தம் சரிப்படாது என்கிறார்கள். ஏனென்றால், "சும்மா இருக்க அருள்வாய்" என்று தாயுமானவர் சொன்னபடி, வேதாந்தம் சும்மா இருக்கச் சொல்லுகிறதென்றும், உலக விஷயங்களை விட்டு விடும்படிக்கும் போதிக்கின்றதென்றும் நினைக்கிறார்கள். எங்குபார்த்தாலும் எவ்விடம் திரும்பினாலும் நவீன நாகரீகம்; அது இல்லாமல் சரிப்படாது இக்காலம்; இக்காலத்தில் தாமரையிலைத் தண்ணீர் போல் இருக்கமுடியுமோ? மிகவும் நன்றாக இருக்கிறது; 20-ம் நூற்றாண்டு பிறந்தகாலம்; நாமெல்லோரும் புத்தியில் பிரகஸ்பதியாயிருக்கும் காலம்; நமது முன்னோர்களுடைய புத்திகளைத் திரட்டி வெண்ணெய்போல் கொடுத்தகாலம்; நாகரீகம் நாளுக்கு நாள் வளர்கின்றகாலம்; கலிகாலம்; ஆகிய இக்காலத்தவராகிய நாம் வேஷ்டிகளைக்கூட கட்டிக்கொள்ளத்தெரியாத இருடிகள் அநுசரித்த நாகரீகத்தைக் கைக்கொள்ளுகிறதா? என்றும் சொல்லுகிறார்கள் சிலர்.

சிலர், நல்லது! நீங்கள் எல்லோரும் தகுந்த யுக்தவாதிகள் (Scientists). கீழே கிடக்கிறகல்லைப்போல் உங்களால் ஒரு நிமிஷமாவது சும்மா இருக்க முடியுமோ? தூங்காமல் தூங்குவது (பிறருக்கு தூங்குகிறது போலும் தான் தூங்காமல் யோகஷ்டையில் இருத்தல்) எவ்விதம் சரிப்படுமோ? உலகவிஷயங்களில் புளியம்பழம்போல் பட்டும்படாமலும் இருத்தல் கூடுமோஎன்றும் கேட்கிறார்கள். அவர்கள் யுக்தி அதிகதூரம் செல்லுகிறதில்லை. நித்தியமாயும், நிர்க்குணமாயும் நிர்விகாரமாயும் சச்சிதானந்த ஸ்வரூபமாயும் இருக்கிற பரமாத்மாவைப் பற்றி அல்லாது ஆத்மாவென்பது ஒருபோதும் சும்மா இருக்காது என்று தெளியாமல், அனாத்மாக்களாகச் சொல்லப்படும் உலகவிஷயங்களில் தங்களுடைய புத்தியைச் செலுத்தி, அதற்குத் தகுந்த பலனைக்கொண்டு மனம் களித்துக் கூத்தாடுகிறார்கள். அணுக்களைப் (Atoms) பலமுள்ள கண்ணாடிகளால் பார்த்தாலும் ஸ்தூலக்கண்களுக்குத் தெரிகிறதில்லை. இவர்களுடைய யுக்தி சாஸ்திரம் (Scientist) மேற்செல்லாமல் போகவே, 'Henry Spenser சொல்லியிருக்கிறது சரிதான்' என்று சுருதி சொன்னது ஞாபகம் வாராது மயங்குகிறார்கள். ஆனால், அப்படி மயங்காமல்

எல்லாவற்றிற்கும் அப்பால் அகண்டமான வஸ்து உண்டென்று வேதம் சொன்னது ஞாபகத்துக்கு வரவேண்டும், ஆக,

" முப்பாழும் பாழாய் முடிவிலொரு சூனியமாய்
அப்பாலும் பாழா பறும் "

என்ற பரம்பொருளை அடைவதற்கு வேதாந்தம் அவசியமானது. இதனால் பாரலௌகிகத்துக்கு வேதாந்தம் அவசியம் என்றதாயிற்று. இனி இகத்திற்கும் வேதாந்தம் அவசியம்தான். என்பதைப்பற்றிச் சொல்வோம். (இன்னும் வரும்)

புதுவை P. R. வேங்கடராமன்
நாவலிஸ்டு.

நல்வாழ்விற்குரிய விதிகள்.

கனம் ஸ்டீபன் ஆலன் என்பவரது சட்டைப்பையிலிருந்து எடுக்கப்பட்ட காகிதத்திற் கண்டது:—

1. உன்னுடைய வாக்குத்தத்தம் சிறிதாகவே இருக்கட்டும்.
2. உண்மையை எப்போதும் பேசு.
3. ஒருபோதும் பிறரை நிந்தியாதே.
4. நல்ல நண்பர்களையே தேடிப்பெற்றுக்கொள், இல்லாவிடில் நண்பரில்லாமலே வாழக்கடவாய்.
5. உன் தொழிலுக்கேற்ற நடத்தையே உன்னிடமிருக்கட்டும்.
6. உதாரகுணமுள்ளவனாவதற்குமுன் நியாயமுள்ளவனாகவே இருக்கவேண்டும்.
7. வெற்றி தோல்வி அதிர்ஷ்டவசமாகையால், ஒருவிளையாட்டிலும் நுழைந்துவிடப்படாது.
8. மயக்கந்தரும் குடிவகை வேண்டாம்.
9. உனது இரஹஸிய சமாசாரங்களைப் பிறரறியக் கொட்டிவிடாதே.
10. எல்லாவற்றிலும் நற்குணமே சிறந்தது.
11. கூடியவரையில் கடன்கொள்ளாமலே காலந்தள்ளப்பார்ப்பது நலமாகும்.

12. எப்போதும் மகிழ்ச்சியோடிருக்கவேண்டுமானால், பாவச் செயல் பாவவார்த்தை பாவநினைவு இவற்றை ஒழித்துவிடு.

13. முன்னுக்குவந்து பின்வாங்காத நிலையில் இருக்க விரும்பினால், வெகுவிரைவில்தனவந்தனாகிவிடுவதில் இச்சை கூடாது.

14. ஒருவனிடம் பேசிக்கொண்டிருக்கும்போது, அவனது முகத்தையே பார்த்துப் பேசவேண்டும்.

15. மனைவியை சம்ரக்ஷிக்கக்கூடிய சக்தியுண்டாகும் வரையில் கல்யாணம்செய்துகொள்ளும்நினைவைக் கொள்ளவேபடாது.

16. ஆகும் வரும்படிக்கதிகமாகச் செலவுசெய்யவேபடாது.

17. வயது முதிர்ந்த காலத்துக்கு வேண்டியவற்றை வாலிபத்திலேயே தேடிவைத்துக்கொள்.

18. கடனைத் தீர்க்கும் வழி நிச்சயமாக இருந்தாலொழிய கடன் வாங்க நினையாதே.

19. வீணாசை உன்னை மயக்கி, உன்னை அழியாத்துன்பப் படுகுழியிலழுத்தும்; ஆதலால் அது தோன்றியவுடன் மறந்துவிடு.

20. நன்னடத்தைக்குறிகள், நல்ல பழக்கமும் நல்ல ஸம்பாஷணையுமேயாகும்.

21. சொற்பமும் ஒழுங்குமான லாபமே, மனதுக்கு அமைதியையும் இன்பத்தையும் தரும்.

22. நடத்தையினால் குணமும் கெட்டு அவமானமும் வரும். ஆதலால், நல்லநடத்தையிலேயே பழகிக்கொண்டிரு.

23. உன்னை இழித்து ஒருவர் பிறரிடம் சொன்னாலும், அவர் பொய்சொன்னாரெனும்படியே நீ நல்லொழுக்கத்துடன் நடந்துகொள்.

24. இரவில் படுக்கைக்குப்போகும்போது, அன்றுகாலைமுதல் செய்திருந்த காரியங்களை ஞாபகத்துக்குக் கொண்டுவா.

25. ஒருபோதும் சோம்பேறியாயிராதே; உன்கைமுதலியவை வேறு உபயோகமான காரியத்தில் அமர்ந்திராவிட்டால், உன் மனதில் நற்பழக்கங்களையே கவனித்துக்கொண்டிரு.

பத்திராதிபர்.

ஸ்ரீ:

மாக காவ்யம் அல்லது சிசுபாலவதம்.

அகில புவனங்களையும் தன் வயிற்றிலடக்கிக் காக்கும் மகாவிஷ்ணு, துஷ்டநிக்ரஹ சிஷ்டபரிபாலனத்தின் நிமித்தம் கிருஷ்ணனாக அவதரித்து, லக்ஷ்மீசமான வஸுதேவர் க்ருஹத்தில் வாஸஞ்செய்கையில், ப்ரம்ம புத்ரரான நாரதமுனிவர் வானுலகிலிருந்து ஒரு தேஜஸைப்போல் இறங்கிவருவதைக் காணலுற்றார்.

அப்பொழுது இதைப் பார்த்த ஜனங்களும் "இது சூர்யனுடைய தேஜஸானால் ஆகாசத்தில் குறுக்காய் ஸஞ்சரிக்கும்; அக்னியினுடையதானால் கீழிருந்து மேல்நோக்கிப் போகும்; அப்படியிருக்க நான்குபக்கங்களிலும் ப்ரகாசித்துக்கொண்டு கீழே விழுகிறதே; இது என்ன ஆச்சரியம்!" என்று திகைத்தார்கள்.

நீருண்டு கருத்த மேகங்களுக்குக்கீழ், கற்பூரப் பொடிகள் போல் வெளுப்பாயிருக்கும் இந்நாரதர் யானைத்தோல் போர்த்துச் சரீரம் முழுவதும் விபூதிபூசிக்கொண்டிருக்கும் பரமசிவனைப் போலவும்; சிவந்த ஜடையினாலும் வெளுத்த சரீரத்தாலும் சிவப்புக் கொடிகள் வளர்ந்த பனிமலை போலவும்; வெளுப்புச் சரீரத்தில் கருப்பு மான்தோல் உடுத்து அதன்மேல் முஞ்சியரைஞாணும் கட்டியுள்ளதால் வெளுப்புச் சரீரமும் நீலவஸ்திரமும் பொன் அரைஞாணும் தரித்த பலராமன்போலவும்; மார்பிலிருக்கும் யக்ஞோபவீதத்தால் சரத்காலத்தில் மின்னலுடன் கூடிய வெளுப்பு மேகம்போலவும்; மான்தோல் போர்த்து இருப்பதால் மேற்போர்வையணியப் பெற்ற ஐராவதம்போலவும்; வீணைகம்பிகளில் உறைந்து சிவந்த நககாந்தியால் பாதிபாகம் பவளத்தினால் கட்டப்பட்டதென்று நினைக்கத்தகுந்த ஸ்படிக ஜபமாலையை உடையவராயும்; காற்றடிப்பதால் சப்திக்கும் "மகதீ" யென்ற வீணையை அடிக்கடி பார்த்துக் கொண்டும் வருகிற இவரை முதலில் ஒளியென்றும், பிறகு சரீரியென்றும், அருகே வந்ததும் மகாபுருஷனென்றும், அதிசமீபத்தில் வந்ததும் நாரதர் என்றும் கிருஷ்ணபகவான் தெரிந்துகொண்டார்.

மகா ஜிதேந்திரியான இந்நாரதர், பின்னே தொடர்ந்துவரும் தேவதைகளை அனுப்பிவிட்டு ப்ராம்மண உத்தமர்களால் சூழப்பட்ட கிருஷ்ணனுடைய இருப்பிடத்தை, இந்திரன் மனையை அடைவது போல், அடைந்து கண்ணன் முன்னிலையில் தோன்ற, மலையிலிருந்து மேகங்கிளம்புவதுபோல் உயர்ந்த ஆசனத்திலிருந்து கண்ணபிரான் வேகமாய் எழுந்து நிற்க, நாரதர் ஆதிசேஷனால் மிகவும் கஷ்டப் பட்டுத் தாங்கப்பெறும் இப்பூமியின்மேல் கிருஷ்ணனுக்கு எதிராக இரண்டு பாதங்களையும் வைத்து நின்றார்.

உடனே பூஜ்யமான இம் முனிவரை அர்க்கியபாத்யாசமனாதி களால் நன்றாகப் பூஜித்தார்.

அஞ்சன பர்வதமும் ஹிமபர்வதமும் போன்ற இவர்கள், சிறிது அளவளாவின பிறகு, முனிவரைக் கண்ணபிரான் ஓர் உயர்ந்த ஆசனத்தில் தமக்கு எதிரே வைத்துக்கொண்டனர். அப்பொழுது சாயங்காலத்தில் உதயபர்வதத்தையடைந்த சந்திரன்போல் அம் முனிவர் விளங்கினார். மஹானுபாவர்கள் பூஜ்யர்களை பூஜையால் வசப்படுத்தும் வழக்கம்போல, ப்ரசன்னமான முனிவருக்கு பூஜையைமுடித்ததுபற்றிக் கிருஷ்ணன் சந்தோஷப்படுகையில், சகலபுண்ய தீர்த்தங்களிலிருந்தும் எடுத்துவரப்பெற்றதாயும் சகல பாபசம்ஹாரம் செய்யத்தக்கதாயுமுள்ள தீர்த்தத்தை கமண்டலுவிலிருந்து மகரிஷி கண்ணன்மேல் ப்ரோக்ஷித்தார். உடனே முனிவரின் உத்தரவின்பேரில் நீலசரீரியான கண்ணன் பொன் ஆசனத்தில் உட்கார்ந்தபொழுது, அந்த ஆசனமானது நாவற்பழங்களுடன் கூடிய மேரு பர்வதத்தின் சோபையை வெற்றிகொண்டதுபோலிருந்தது.

உருக்கிவார்த்த தங்கம் போன்ற பீதாம்பரம் உடுத்துப் பூரண சந்திர களங்கம்போன்ற சரீரத்துடன் கூடிய கண்ணன், மத்தியில் வடவாமுகாக்னியையுடைய சமுத்திரம்போல் விளங்கினார். இப்படியிருக்கும் சக்கிரபாணியின் காந்திகளுடன் கலந்த முனிவரின் காந்திகள், இரவில் அசைந்துகொண்டிருக்கும் இலைகளின் இடையில் தங்கும் சந்திரகிரணங்கள்போல் விளங்கின. மலர்ந்த காயாம்புத்

பத்திற்குச் சமமான கிருஷ்ணன் காந்தியும், ஏழு இலைப்பாலைப் புஷ்பத்தின் மகரந்தப்பொடிகட்குச் சமமான முனிவரின் காந்தியும் ஒன்றுக்கொன்று சேர்ந்ததால், அப்பொழுது ஒரே வர்ணம்போல் அவ்விருவரும் காணப்பட்டார்கள்.

ப்ரளயகாலத்தில் உலகங்கள் விஸ்தாரமாய்த் தங்கும் கண்ணனுடைய சரீரத்தில், தபோதனர் வரவினுலுண்டான சந்தோஷக் குறிப்பு கொஞ்சங்கூட அடங்கவேயில்லை. சூர்யனைக்கண்டு தாமரைகள் மலருவதுபோல சூர்யனைப்போல் ப்ரகாசிக்கும் முனிவரைக் கண்டதும் தாமரைபோன்ற கண்ணனுடைய கண்கள் மலர்ந்ததால், 'செந்தாமரைக்கண்ணன்' என்ற பெயர் இப்பொழுதுதான் அவருக்குத் தெளிவாயிற்று. பிறகு அவ்வச்சுதன், சந்திரகாந்திகள் உப்பரிக்கைகளை வெறுப்பாக்குவதுபோல, தன்பல்தாவள்யத்தால் முனிவர் சரீரத்தில் நன்ருக வெள்ளொளி வீசும்படிக்கு மந்தஹாஸத்துடன் வார்த்தை சொல்ல ஆரம்பித்தார்.

"உம்முடைய தர்சனம் சரீரிகளுக்குப் புண்யமான ஸ்தானத்தை நிகழெதிரிறந்தகாலங்களிலும் கொடுக்கத்தக்கது. இப்பொழுதோ பாபத்தைப் போக்கடிக்கிறது. இனி ஏற்படப்போகிற க்ஷேமத்திற்கும் காரணமாயிருக்கிறது. இவைகளெல்லாம் எனக்கு நேர்ந்ததின்காரணம், பூர்வத்தில் செய்த பாக்யம்தான். உலகத்தில் எங்கும் ப்ரகாசிக்கும் 1000-கிரணங்களையுடைய சூர்யனுற்கூடப் போக்கடிக்க முடியாத பாபமாகியபேரிருள், உம்முடைய தபோபலங்களால் போக்கடிக்கப்படுகிறது. பிள்ளையின் க்ஷேமத்தை விரும்பும் தகப்பன் கெட்டிப்பாத்திரத்தில் செல்வத்தைப் புதைத்து விசாரமொழிந்திருப்பதுபோல, ஜனங்களின் க்ஷேமத்தை விரும்பும் ப்ரம்மதேவர் "வேதங்களை" உத்தம புருஷரான உம்மிடத்தில் ஒப்புவித்து விசாரமற்றிருக்கிருர். அப்படி உம்மிடமடங்கிய வேதம் அடிக்கடி உபயோகிக்கப்பட்டபோதிலும் குறைவதில்லை. ஹே! முனிவரே!! பாபமில்லாத உம்முடைய வரவினுல் நான் கிருதார்த்தனுனேன். இருந்தாலும் ச்ரேயஸ்கரமான விஷயங்களில் ஒருவருக்குப் போதும்

என்ற மனது கிடையாததால், உத்தமமான உம்முடைய வார்த்தைகளைக் கேட்க விரும்புகின்றேன். நீர் விரக்தராயிருந்தாலும் வந்த கார்யத்தைச் சொல்லும் என்று நான் தைர்யமாகக் கேட்பதற்குக் காரணம் உம்முடைய வரவேதான்".

இவ்விதம் மொழிந்த கண்ணபிரானை நோக்கி முனிவர் சொன்னார். " ஹே புருஷோத்தமா! நீர் விரக்தராயிருந்தாலும் " என்று நீர் சொல்வது தகுந்ததல்ல. ஏனென்றால் யோகிகளுக்குக்கூடப் ப்ரத்யக்ஷமாயிருப்பவர் நீர்தான். இதைக்காட்டிலும் பெரியகார்யம் யாது இருக்கிறது? திருடர்கள் நிரம்பியதாலும், நடமாட்டமில்லாததாலும் போகமுடியாத காட்டை அடைய விரும்பும் தீரனுக்கும், சிற்றின்பத்தால் தடுக்கப்பட்டதும் பழக்கமில்லாததால் போகமுடியாததுமான மோக்ஷத்தையடைய விரும்பும் புருஷனுக்கும் அபாயமேயில்லாத கடைசி எல்லைபாக நீர்தான் ஆகிறீர். ஞானதிருஷ்டியையுடைய யோகிகளால்கூட கஷ்டப்பட்டு அடையத்தகுந்தவர் என்றும், ஸ்பர்சிக்கமுடியாதவரென்றும், விகாரங்களுக்கு வெளிப்பட்டவரென்றும், ப்ரக்ருதியின் பின்னரென்றும், ஆதிமூர்த்தியென்றும், உத்தமபுருஷரென்றும் உம்மைத்தான் பெரியோர்கள் சொல்லுகின்றனர். சில்பி வீடுகளை விளையாட்டாகத் தூண்களின் மேல் நிறுத்துவதுபோல, வராஹாவதாரத்தில் விளையாட்டாகத் தூக்கப்பட்ட இப்பூமண்டலத்தை ஆதிசேஷன் சிரஸில் நீர்தான் வைத்தவர். அஸாத்திய மென்பதே கிடையாத உம்முடைய மஹிமையை யார்தான் அறியமுடியும்? ஏனென்றால் நீர் மனுஷ்ய ரூபியாக இருந்தாலும், ஸம்ஸாரஸாகரத்தை நாசம் செய்யும் சக்தியால் ஸம்ஸாரர்களையும் நாசம் செய்கிறீர். அதிபாரத்தினால் வளைந்திருக்கும் இப்புவியின் பாரத்தைக் குறைக்க நீர் அவதரித்தபோதிலும், த்ரிலோகங்களையும் நாபீகமலத்திலடக்கும் உம்மால் இப்பூமி பாசமுள்ளதாகவும் பூஜ்யையாகவும் செய்யப்பட்டது. நிஜபுஜபராக்ரமத்தினால் ஜகத்தை ஹிம்ஸிக்கும் அரக்கர்களை த்வம்ஸம் செய்யும் நிமித்தம் நீர் பூமியில் அவதரிக்காமற் போனால், ஸமாதிநிஷ்டர்களான யோகிகளாலும் அறியமுடியாத நீர் அல்பரான எம்

போர்வியர்களுடைய கண்களுக்கு விஷயமாக எப்படி ஆவீர்? பேரிருள் சூழ்ந்த ஆகாயத்தை சூர்யனைத்தவிர யார்தான் ப்ரகாசிப்பிவிக்கமுடியும்? அதுபோல் ஜகத்ரக்ஷகரான தேவரீர் தான் அரக்கர்களால் நாசம் செய்யப்பட்ட இவ்வுலகைக் காக்கவல்லவர். ஸிம்ஹம் யானைகளைக் கொல்லுவதுபோல ஹிரண்யாக்ஷன் முதலிய யானைகளை வதைசெய்த உம்மை அல்பமான கம்ஸன் முதலியவர்களை வதைசெய்தது பற்றித் துதிப்பது அவமானம் செய்வதுபோலாகும். ச்ரமம் பாராமல் துஷ்டர்களைக் கொல்லும் நிமித்தம் பிறரால் ஏவப்படாமலே தேவரீர் அவதரித்திருக்கையில், தேவரீருடன் செய்த ஸம்பாஷணையானது இவ்வளவு தூரம் ஸ்தோத்தரிக்கும் வாக்சாதுர்யத்தை எனக்குக்கொடுத்தது. ஹே! உபேந்திரா!! இந்திரன் என்னிடத்தில் சொல்லிய உலகத்திற்கு ஹிதமான வார்த்தையை நான் சீக்கிரத்தில் சொல்லி முடிக்கிறேன். இந்திரனுடைய ஸகல கார்யங்களிலும் சுறுசுறுப்புள்ள தேவரீர் அதைக்கேட்கவேண்டும்."

"இந்திரனுடைய இந்திரசப்தார்த்தத்தை (மகாஐச்வர்யவான்) நாசம் செய்கிறவனையும், சூர்யனைப்போன்ற காந்தியையுடையவனுமுள்ள ஹிரண்யகசிபு என்ற அஸுரன் ஒருவன் பிறந்தான். அவன் சத்துருக்களிடத்திலிருந்துண்டாகும் பயத்தை லக்ஷியம் செய்யவேயில்லை. பிறர் க்ஷேமத்தைக் கண்டு பொறுக்காத இவனால்தான் தேவதைகளின் மனதில் முதன்முதல் பயம் உண்டாயிற்று. இவனுடைய பராக்ரமத்தில் ஆசைகொண்டு ஸகலஸம்பத்துக்களும் நான்குதிக்பாலகர்களையும்விட்டு இவனிடம் வந்துசேர்ந்தன. அப்பொழுது முதற்கொண்டே தேவதைகள் பட்டணங்களைப் பகைவர் நுழைய முடியாதவைகளாகவும், ஆயுதங்களைக் கூர்மையுள்ளவைகளாகவும், யுத்தகவசங்களைப் பிளக்கமுடியாதவைகளாகவும், ஆயத்தப்படுத்தினார்கள். வேறுலகங்களிலும் ஸஞ்சரிக்கும் இக்கசிபு அகஸ்மாத்தாய் ஏதாவது ஒரு திக்கை அடைந்தால், அப்பொழுது அத்திக்கிலுள்ள தேவதைகள் தங்கள் தங்கள் கிரீடங்களின் மேல் கைகளைக் கூப்பிக்கொண்டு திரிகாலங்களிலும் ஸந்தியாவந்தனங்களைச் செய்யாமல் இவனுக்கே நமஸ்காரம் செய்தார்கள். ஹே! நாஸிம்ஹா!!

பிடரிமயிர்களின் கூட்டங்களால் பிளக்கப்பட்ட மேகங்களையுடைய தேவரீர் அழகான ஸ்திரீகளின் ஸ்தனங்களைப் பிடித்துப் பிடித்து வளர்ந்திருக்கும் நகங்களால் இந்தக்கசிபுவின் மார்பைப்பிளந்தீர்". ;

அதேகசிபு மறுபடியும் தன்கொழுப்பினாலுண்டான தினவை தேவதைகளுடன்கூடச் சண்டைசெய்து போக்க விரும்பியும் ஸ்வர்க்கத்தைக் கெடுக்க எண்ணியும் பயங்கரமான ராவணனாகப்பிறந்தான். அந்தராவணன் மூவுலகிற்கும்தான் ப்ரபுவாக விரும்பித்தன் இஷ்டத்திற்குத்தகுந்த வரத்தை சூலபாணியினிடமிருந்து அடையவேண்டுமென நினைத்துத் தன் ஒன்பது தலைகளையும் அறுத்து ஹோமம் செய்து பத்தாவது தலையையும் அறுக்குங்காலத்தில் அவர்பிரசன்னமாக வந்து வரங்கொடுத்தார். வரம் பெற்றதும் வரத்தைப்பரீக்ஷிக்க விரும்பி கைலாஸ பர்வதத்தைப் பிடுங்கினான். அதனால் நடுநடுங்கிய பார்வதி வலுவில் சிவபெருமானை ஆலிங்கனம் செய்து கொண்டாள். அவ்விதம் ஆலிங்கனம் செய்து கொள்ளுதலாலுண்டாகிய சுகம் பெற்றவரத்திற்குப்ரதி உபகாரமாக இராவணனாற் செய்யப்பெற்றது போலிருந்தது. பிறகு இந்திரனுடன் விரோதித்துக்கொண்டு அமராவதியைப் பிடுங்கினான். நந்தவனத்தை யழித்தான். சூடாமணியைத் திருடினான். தேவஸ்திரீகளைக் கெடுத்தான். இன்னம் மற்றைய உபத்திரவங்களையும் இராப்பகலாய் உண்டு பண்ணினான். சண்டையில் இவனால் விரட்டப்பட்ட இந்திரன் ஐராவதம், உச்சைச்ரவஸ் ஆகிய இவைகளுடைய அழகான நடையையும் விரும்பாமல் புறங்காட்டி வேகமாகவோடுதலையே விரும்பும்படி நேர்ந்தது. சூர்யவெளிச்சத்திற்குப் பயப்படும் கோட்டான் குகைகளில் பதுங்குவது போல் தோல்வியடைந்த இந்திரன் ராவணனுடைய உபத்திரவம் பொறுக்கமாட்டாமல் பயந்து கொண்டு மேருபர்வதத்தின் குகைகளில் பதுங்கி அநேக நாள் வஸித்தான். இவனை நாசம்செய்வதற்கு எந்த ஆயுதங்களாலும் முடியவில்லை. கடைசியாகப் பாறைபோல் உறுதியாயுள்ள இவன்கழுத்தில் தாக்கிய விஷ்ணுசக்கரமும் நெருப்பைக்கக்கிற்றே ஒழியக் கழுத்தையறுக்கவில்லை. மதங்கொண்ட யானை ஆழ்ந்ததடாகம்சென்று ஆங்குள்ள சங்குகளையும், புஷ்பங்

களேயும் நாசம் செய்து தடாகத்தையும் கலக்குவதுபோல ராவணன் குபேரனிடம் சென்று அவனுடைய சங்க நிதியையும், புஷ்பகவிமானத்தையும் பிடுங்கிக்கொண்டு அவன் மனதையும் கலக்கினன். வருணபகவானுடன் சண்டை செய்கையில் அவரால் ஏற்பட்ட நாகபாசம் ராவணனுடைய கோபமான கர்ஜனையைக் கேட்டு பயந்து திரும்பி யஜமானனேயே ஹிம்ஸிக்கலாயிற்று. யமனுடன் சண்டை செய்து அவனுடையவாகனமான எருமையின் கொம்புகளைத் தனக்கு வில் செய்துகொள்வதற்காக வெட்டினன். கொம்புகளின் பாரம் தாங்காமல் தலையைக்கீழே தொங்கவிட்டிருந்த அவ்வெருமை இப்பொழுதும் கொம்புகள் வெட்டுப்பட்ட அவமானத்தால் தலையைத் தொங்கவிட்டிருக்கிறது. சூர்யன் கடுங்கோடையிலும் கிரணங்களை வெளிவிட்டு ப்ரகாசிக்கப் பயந்து உஷ்ணமில்லாத வேர்வைகளை முத்துப்போல் உண்டுபண்ணி ராவணனுடைய ஸ்திரீகளை அலங்கரித்தான். கலைகள் (வித்தைகள்) நிரம்பியவன் ராவணனுக்குப் பயந்து வெளிவராமல் உள்ளேயே இருந்துகொண்டு தன் ஸ்திரீகளுக்கு ஸந்தோஷம் உண்டுபண்ணினதுபோல பதினறு கலைகள் நிரம்பிய சந்திரன் ராவணனுக்குப் பயந்து அவன் வீட்டிற்குள்ளிருந்துகொண்டே ராவணனுக்கு லீலாவினோதங்களையுண்டுபண்ணி வந்தான். தன் அழகான ஸ்திரீகளின் காதுகளில் தந்தத்தினல் தாடஸ்கம் செய்துபோட உத்தேசித்து விக்னேச்வரருடைய ஒரு கொம்பைப்பிடுங்கினன். பலமாய்ப் பிடுங்கியதால் இன்னமும் அவருக்கு ஒரு கொம்பு முளைக்கவேயில்லை. ராவணன் தன் ஸ்திரீகளுடன் உல்லாஸமாய்ப் பேசிக்கொண்டிருக்கையில், வாயுபகவான் அவனுடைய ப்ரீதியை ஸம்பாதிக்கும் நிமித்தம் ஸ்திரீகளுடைய புடைவைகளைத்தூக்கி மேல்பட்டையுரித்த வாழைமரம்போல் பளபளவென்று ஜ்வலிக்கும் அழகிய துடைகளைப் பார்க்கும்படியான நேத்ரானந்தத்தை யவனுக்கு உண்டாக்கி அகாரணமாய் ஹிம்ஸைப்படுகின்ற மற்றைய தேவதைகளுக்கும் சிபார்சு செய்வான். உலகத்தை ஹிம்ஸிக்கும் இவனுடைய ப்ரபாவத்தால் அக்னிபகவான்பயந்து ஜனங்களுடைய வயிற்றில் ஜடாராக்னி ரூபமாக இருந்தார். இந்த க்ரூரனுக்குஊழியம் செய்யும்நிமித்தம், பிறருக்கு ஹிம்ஸை செய்து

கொண்டும், கோட் சொல்லிக்கொண்டுமிருக்கிற துஷ்டர்கள் யஜமானனுக்காகத் தங்கள் குணத்தை விடுவதுபோல பிறருடைய மர்மத்தைப் பிளந்துகொண்டிருக்கிற இரண்டு நாக்குள்ள பாம்புகளும் தங்கள் பாம்புக் குணத்தை விட்டன. கன்னப்புழைகளிலிருந்து பெருகும் மதஜலங்களையுடைய திக்கஜங்கள் இந்த ராவணனுடைய கஜங்களால் உதைத்து விரட்டப்பட்டு திக்குத்திக்காய் ஓடிப்பயந்து கொண்டு திரும்பாமல் திக்கஜங்கள் என்றபெயரை நிச்சயப்படுத்திக் கொண்டன. மன்மதபாணத்தினால் அடிபட்டுத்தபிக்கும் இவன் சரீரம் தேவஸ்திரீகளுடைய உஷ்ணமான மூச்சுக்காற்றினாலும் சந்தனங்களாலும், ஜலத்தில் நனைத்த விசிறியின் காற்றினாலும் ஸுகமடைந்தது. பன்னிரண்டு மாதங்களிலும் புஷ்பிக்கும்படி செய்யப்பட்டு ஷட்ருதுக்களும் கிரீஷ்மத்துடன்வர்ஷமும், சரத்துடன் ஹேமந்தமும், வஸந்த[illegible]டன் சிசிரமும் சேர்ந்து வாஸஞ்செய்து கொண்டு இவன் முன்னிலையில் வாஸ்தவமான குடும்பியாயிருக்கும் தன்மையடைந்தன. ஹே! கிருஷ்ண!! கீழ்ச்சொன்னவிதம் உலகை ஹிம்ஸித்த ராவணன் தேவரீரை ஸாமான்ய மனுஷ்யரல்லரென்றும், பிறப்பில்லாதவரென்றும், மனுவம்சத்தினுதித்த மகான் என்றும் பிறரால்தான் கொல்லப்படாதவரென்றும் தெரிந்தும் கூட ஜானகியை விட்டானில்லை. ஜனங்கள் அபிமானத்தையல்லவா முக்கியமாய்ப்பாராட்டுகிறார்கள். காட்டிலிருந்து ஸீதையை அபகரித்த இப்பயலை தேவரீர் தசரதகுமாரராக அவதரித்து ஸமுத்திரத்தில் அணைகட்டி லங்கைக்கு ஸமீபத்தில் வதித்த விஷயம் ஞாபகமிருக்கிறதோ? ”

நாடகத்தில் வேஷம் பூண்டுகொள்ளும் நடன் ஒரு வேஷத்திற்குப் பிறகுமறுவேஷம் தரித்ததும் ஜனங்களால் வேறொருவனென்று நினைக்கப்படுவதுபோல அதேராவணன் மறுபடியும் வேறொருவனாகப் பிறந்து சிசுபாலன் என்ற பெயருடன் உலகை ஹிம்ஸிக்கிறான். இவன் குழந்தையாயிருக்கும்பொழுது நான்கு கைகளுடனும் மூன்று கண்களுடனும் இருந்தான். இப்பொழுது யௌவனதசையையடைந்து கிரணங்களால் வியாபிக்கப்பட்ட பர்வதங்களை

யுடைய சூரியன்போல் கப்பம் கட்டும் அநேக அரசர்களையுடையவனாகவிருக்கிறான். மேலும் இவன் தான்இஷ்டப்பிரகாரம் ஸுராஸுரர்களுடைய க்ஷேமநாசங்களுக்கு எஜமானனாகவுமிருந்துகொண்டு, தேவவரத்தால் வலிமை மிகுந்த ராவணன் முதலோரைக்கூட தான், சொந்த புஜபலத்தால் அவமதிக்கிறான். கற்பழியாத உத்தமி வேறு ஜன்மத்திலும் அதே பர்த்தாவை அடைவது போல இப்போது இச்சிசுபாலனை கொடியகுணங்கள் அடைந்தன. அதினால் முன்போலவேயுலகைத்துன்புறுத்துகிறான். ஆகையால், சட்டத்தை மீறும் இவனை, தேவரீர் யமனுலகிற்கிறையாக அனுப்பவேண்டும். உம்மைப்போன்றவர்கள் கெடுதிசெய்யும் துஷ்டப்பயல்களைக் கொல்ல வேண்டுமல்லவா?"

"ஹே! கிருஷ்ணா!! சத்ருநாசத்திலிருந்துண்டாகும் நிர்ப்பயத்தை இந்திரனடையட்டும். இந்திராணியின் பெருத்தஸ்தனங்களை, இறுக்கிக்கட்டிக்கொண்டு சுகமாக வாழட்டும்."

இவ்விதம் மொழிந்த தேவரிஷி ஆகாயத்திற்கிளம்பி, சந்திரன் போல் பிரகாசிக்கையில், 'ததாஸ்து' என்றங்கீகாரம் செய்தவரும் சிசுபாலனைக்குறித்து கோபங்கொண்டவருமான சாரங்கபாணியின் முகத்தில், ஆகாசத்தில் சத்துருக்களின் நாசத்தை முன்பாகவே தெரியப்படுத்தும் வால் நக்ஷத்திரம்போல் புருவநெறிப்புண்டாயிற்று.

(முதற்சர்க்கம் மூற்றிற்று)

எஸ். பார்த்தசாரதி ஐயங்கார்,
ஸ்ரீரங்கம்.

சுலக்ஷணா.

—:)⊜(:—

(320-ம் பக்கத் தொடர்ச்சி.)

ஆனால் நான் பொய்சொல்லுகிறவள் என்று சொல்ல உனக்கு அவ்வளவு மனத்துணிவு உண்டாயிற்று? என்று சுலக்ஷணா கன்னங்கள் சிவக்கவும் கண்களில் தீப்பொறிபறக்கவும் மிகவும் கோபத்துடன் சொன்னாள்.

கங்காதரன், "அம்மா, ஒருவரைப்பற்றிக் குற்றம் சொல்வது எப்பொழுதும் சந்தோஷமான காரியமல்ல. ஆனால் குற்றம் சாட்டுபவன் ஆணாகவும் குற்றவாளி பெண்ணாகவும் இருந்தால், அது மிகவும் மனவருத்தத்தை உண்டு பண்ணுகிறது. இப்பொழுது நான் வந்திருக்கிறது அப்படிப்பட்ட காரியந்தான்."

"கங்காதரா, இத்துடன் உன்பேச்சை நிறுத்து," என்று சுலக்ஷணா சொல்லித்தான் இருந்த இடத்தைவிட்டு எழுந்திருந்தாள்.

கங்காதரன், "நான் வந்தகாரியத்தைச் சொல்லிவிட்டுத்தான் போவேன். தங்களுடைய அந்தஸ்தைக்கண்டு பயந்து விடுகிறவன் நானல்ல. எரிந்து விழுகிற நக்ஷத்திரங்கள் வெகு தூரத்திலிருக்கும் பொழுது நல்ல பிரகாசத்தோடு காணப்படுகின்றன. ஆனால் அவை தரையில் விழுந்தபிறகு சமீபத்திற் போய்ப்பார்த்தால் அற்பமான கற்களாயிருக்கின்றன. அதுபோல உங்களைப்போன்ற ஜமீந்தார்களும் மிராசுதார்களும், மற்றைய பெரிய அந்துஸ்துள்ளவர்களும் தூரத்திலிருந்து பார்ப்பவர்களுக்குத்தான் உயர்வாகத் தோன்றுவார்கள்."

சுலக்ஷணா மறுபடியும் உட்கார்ந்துகொண்டு சொல்லுகிறாள், "நீ என்னை அவமானப் படுத்துவதற்காக வந்திருந்தால், நான் அதற்குக் கீழ்ப்படிய வேண்டியதுதான். ஏனென்றால் வயோதிகனான உன்னைவேலையாட்களைவிட்டுப் பிடித்துத்தள்ளச்சொல்லுவது எனக்கு அதிக வருத்தத்தைக் கொடுக்கும்."

"உங்களுக்கு அவ்விதமான எண்ணம் கிடையவே கிடையாது. அப்படிச் செய்வதற்குத் தைரியமும் போதாது," என்று கங்காதரன் சொல்லி அவளுடைய முகத்தைக்கூர்ந்து பார்த்தான்.

"இப்பொழுது நான் ஒரு சிறுகதை சொல்லுகிறேன். அதை நடுவில் தடுக்காமல் தாங்கள் கேட்கவேண்டும். அதனுடைய கருத்தைக் கடைசியில் சொல்லுகிறேன். உயர்ந்த அந்தஸ்துள்ள ஸ்திரீ ஒருத்தி இருந்தாள். அவள் விதவை. மாசற்ற கற்புடையவள் என்று உலகத்தாரால் மதிக்கப்பட்டவள். அவள் தன்னைவிட அந்தஸ்தில் மிகவும் குறைந்தவனான வாலிபனொருவனைக் காதலித்தாள். தன்னுடைய அந்தஸ்திற்குக் குறைவு வந்துவிடுமென்று நினைத்து அவனைக் கலியாணம் செய்துகொள்ள இஷ்டப்பட தன்னுடைய கௌரவம் கற்பு முதலியவற்றை யெல்லாம் கஸ்யத்தில் அவனுடைய வைப்பாட்டியாக இச்சித்தாள். அவளுக்குப் பெரியவர்களான குமாரத்திகள் இருக்கிறார்கள். அவர்களுக்கு நல்ல முன்மாதிரி காட்டவேண்டியது அவளுடைய கடமை. அவள் அந்தக் கடமையையும் மறந்து, அவ்வாலிபனுடைய அழகில்மயங்கினவளாய், அவனை அவன் தன்னுடைய ஆசைநாயகியாக ஏற்றுக்கொள்ளும்படி வற்புறுத்தினாள். அந்தவாலிபன் அதை மறுத்துவிட்டான். அவளுடைய துர் எண்ணத்தை வெளியிடுவதில்லையென்றும் வாக்களித்தான். ஆனால் அவள் அவனைப் பழிவாங்குவதாகப் பயமுறுத்தினாள். இவ்வளவு லக்ஷணமான ஒரு ஸ்திரீ இவ்வளவு துர்நடத்தையுள்ளவளாயிருக்கிறாளே என்ற வருத்தத்தோடு அவன் அவளை விட்டுச் சென்றான். அவள் தான் செய்த காரியத்திற்காக வருத்தப்பட்டால் நடந்தது இரகசியமாய் இருந்துவிடுமென்று நம்பினாள். ஆனால் அவள் அவனுடைய நல்லபெயரைக் கெடுப்பதற்காக, தான் பயமுறுத்தியபடி தனக்குத் தெரிந்தவர்களிடமெல்லாம் ஒரு கட்டுக்கதையைச் சொன்னாளென்றால் அவனுக்கு எவ்வளவு வருத்தம்உண்டாகியிருக்குமென்பதை நீயே யோசித்துப்பார்." கங்காதரன் பேச்சை நிறுத்தினான். ஆனால் அவளை உற்றுப்பார்ப்பதை நிறுத்தவில்லை. தான் கதையைச் சொல்லிக்கொண்டு வரும்பொழுது அவளுடைய முகம் அடிக்கடி மாறுவதைக் கவனித்தான்.

சுலக்ஷணை, "நீ சொல்வது எனக்குத் தெரியாது என்பதிற் பிரயோசனமில்லை. ஆனால் இவ்விதமாக நீ என்னைப்பற்றி வெளியே

பிறரிடத்தில் எனக்கும் சிந்தாமணிக்கும் நடந்ததைப்பற்றிச் சொல்வதாயிருந்தால், அவனுடு சொல்பவன் என்று உன்னை இவ்விடம் விட்டு நீங்கச் செய்வேன்."

கங்காதரன் சுலக்ஷணுவின் வீட்டைவிட்டுச் செல்வதற்காக எழுந்திருந்து, தங்கப்பூண்பிடித்த தன் பிரம்பைக் கையிலெடுத்துக் கொண்டு சொல்லுகிருன், "உன்னிஷ்டப்படியே நான் இவ்விடம் விட்டுச்செல்லுகின்றேன். ஆனல் இப்பொழுது நடந்திருக்கும் காரியங்கள் எவ்விதமாய் முடியுமென்பது ஒருவேளை உனக்குத் தெரியாமலிருக்கலாம். நான் பணக்காரன் என்று தெரிந்துகொள். உன்னுல் மிகவும் கொடுமையாய்த் தீங்கிழைக்கப்பட்டவனுகிய சிந்தாமணிக்கு நியாயம் கிடைப்பதற்காக நான் என்னுடைய பணத்தைத் தாராளமாய்ச் செலவுசெய்வேன். நீ உன்னுடைய உயர்ந்த அந்தஸ்தாலும் பெருமையான பெயராலும் அவசியமானல் உன்னுடைய செல்வத்தாலும் அந்த வாலிபனை நசுக்கிவிடலாம் என்று எண்ணியிருந்தாய். ஆனல் அந்த எண்ணம் நிறைவேருது. அவனுக்குச் சிநேகிதர்களில்லாமலில்லை. நான் அவனுடையநண்பன் உன்பேரில் மானநஷ்டிக்காக நியாயசபையில் பிரியாது செய்யப்படும்—"

"போதும், நிறுத்து. நான் அதிகமாய்க் கேட்டுக்கொண்டிருந்துவிட்டேன்," என்று சுலக்ஷணு தான் இருந்த இடத்தைவிட்டு எழுந்திருந்து, உரத்த சப்தமாய்ச் சொன்னுள். ஏனென்றுல் அவனுடைய பயமுறுத்தல்களையும், அவன் தனக்கு விரோதமாகச் செய்யப்போகிற காரியங்களைப்பற்றியும் இவனுடன் எதிர்த்து நிற்பதைத் தவிர வேறு வழியில்லையென்று எண்ணினுள்.

கங்காதரன், "இன்னும் ஒரு வார்த்தை அம்மா, உனக்குப் பெரியவர்களான இரண்டு குமாரத்திகள் இருக்கிறுர்கள். அவர்களை நல்ல இடங்களில் விவாகம் செய்து கொடுக்க வேண்டுமென்று நினைத்துக்கொண்டிருக்கிருய். உன்னுடைய நடத்தை அவர்களுக்கு எப்படிப்பட்ட முன் மாதிரியைக் கொடுக்கும் என்பதை யோசித்துப்பார். இந்தக்காரியத்தில் என்னை எதிர்த்து நின்றுல் உனக்கு ஒரு தீங்கும்

வாரென்று நினைக்கிறாயா? நான் சொல்வதை நம்பு. நீ சொல்வதை நம்பாமல், உலகம் சிந்தாமணியின் வார்த்தையைநம்பும். நீ சிந்தாமணியைப் பற்றிச் சொன்னகதை பொய்யென்று தீர்ப்பானால், நீ அவனுக்கு வைப்பாட்டியாகிறேனென்று சொன்னவார்த்தை உலகத்தாரால் நிச்சயமாய் நம்பப்படும், அப்பொழுது உன்னுடைய புத்திரிகளின் கதி என்னாகும்? தாய்க்கு இவ்விதமான பெயருண்டானால் புத்திரிகளுக்கு எத்தகைய கணவர்கள் கிடைப்பார்கள்? உன் மகன் இப்பொழுது கூட உனக்குக் கீழ்ப்படிகிறானில்லையென்று கேள்விப்படுகிறேன் சிந்தாமணியிடம் உனக்கு உண்டான இச்சை வெளியானால், உன்னிடம் அதிகமாகக் கீழ்ப்படிதலுள்ளவனாயிருக்க அது நல்ல காரணம் என்று கருதுவானோ? என்னை நேரே எதிர்ப்பதற்குமுன் இவற்றையெல்லாம் நினைத்துப்பார். இப்பொழுது நீ சிந்தாமணிக்கு இரகசியமாகச் செய்த தீங்கை இரகசியமாய் நிவர்த்திசெய்யலாம். உன்னுடைய சினேகிதர்களிடம் நீ சிந்தாமணியைப்பற்றி முன்சொன்னது பொய்யென்று ஏதாவது ஒருகாரணம் காட்டிச்சொல்வது உனக்கு வேப்பங்காயைச் சாப்பிடுவதுபோல் கசப்பாகத்தான் இருக்கும். ஆனால் உன்னுடைய நடத்தை நியாயசபையில் வெளியானால் அதைவிட ஆயிரமடங்கு கசப்புண்டாகும். இப்பொழுது கடைசியாகக் கேட்கிறேன். உன்னுடைய தீர்மானமென்ன? ”

சுலக்ஷணை, “ நான் ஒன்றும் சொல்லவேண்டியதில்லை. இன்னேரம் உன்னைத் தடைப்படுத்தாமல் உன் பேச்சைக் கேட்டுக்கொண்டிருந்தது உன்னுடைய வயதிற்கு நான்செலுத்தவேண்டிய மரியாதையாற்றான். ”

தெளிவான ஜலத்தையுடைய ஆற்றின் அடியிற் கிடக்கிற கற்களை கண்ணானது எப்படி ஊடுருவிப் பார்க்கிறதோ அப்படியே கங்காதரன் சுலக்ஷணையின் மனதிலுள்ளதெல்லாம் தனக்கு நன்றாய் விளங்குகிறதென்று தன் பார்வையால் காட்டி அவளிடம் சொல்லுகிறான், “ இல்லை உனக்குஅவ்விதமான எண்ணங்கள் கிடையா. நான் சொன்னதை நீ கடைசிவரை கேட்டதின் காரணம் உன் மனதில் உண்டாகிய பயமேயொழிய வேறொன்றுமில்லை. நான் இனிமேல் இங்கே நிற்கவில்லை. போய் வருகிறேன். ”

இந்தச் சமயத்தில் கதவு திறக்கப்பட்டது. மதிமான் உள்ளே வந்தான். கங்காதரனைப்பார்த்துப் பரிகாசமாய்ச் சிரித்துச் சொல்லுகிறான், "ஏனப்பா என்பிரியமான சிநேகிதனாயிற்றே நீ? எங்கிருந்து இங்கு வந்து சேர்ந்தாய்? மதிமானுடைய சிரிப்பையும் பரிகாச வார்த்தைகளையும் கேட்ட கங்காதரன் அவனை அலக்ஷியமாகவும் கோபமாகவும் பார்த்தான். அப்பொழுது வயதுசென்றவனாகிய கங்காதரன் வேடிக்கையாகக் காணப்படவில்லை. அவனுடைய பார்வையில் பெருந்தன்மையும் கம்பீரமும் காணப்பட்டன. அவன் தன்னை விட மேலான அந்தஸ்துள்ளவனுக்கு முன்னிற்பதுபோலல்லாமல், தன்னைவிடத் தாழ்ந்தவனுக்கு முன்னிற்பதுபோற் காணப்பட்டான். அச்சமயம் கங்காதரனுடைய தோற்றத்தைப்பார்த்த சுலக்ஷணை ஆச்சரியமடைந்தாள். மதிமான்கூட கொஞ்சம் பயந்தான். ஆனல் உடனே அந்தப்பயம் மாறிவிட்டது. அவன் இன்னொருதரம் சிரித்து விட்டுச் சொல்லுகிறான், "நன்றாயிருக்கிறது கிழவா, அன்று குதிரை வண்டிக்காரனோடு சண்டைபோட்டபோது காணப்பட்டதுபோல் இப்பொழுதும் காணப்படுகிறாய். நான் சொல்வது உனக்கு ஞாபகத்துக்கு வருகிறதா?"

சுலக்ஷணையைப்பார்த்துக் கங்காதரன் சொல்லுகிறான், "உனக்கு இப்படிப்பட்ட மகன் வாய்த்ததைப்பற்றி நான் உண்மையில் பரிதாபப்படுகிறேன்."

"அட போக்கிரிக் கிழட்டுப்பயலே," என்று மதிமான் மிகவும் கோபத்துடன் இரைந்து சொல்லி, தன்கையை மடக்கிக்கொண்டு கிழவன்மேல் பாய எத்தனித்தான். ஆனல் கங்காதரன் தன் பிரம்பை நீட்ட பயங்காளியான மதிமான் நின்று விட்டான்.

"நீ என்மேல் உன் விரலை வைத்தால் இந்தப்பிரம்பால் உன்னை வெளுத்துவிடுவேன்," என்று கங்காதரன் அமைதியுடன் சொல்லி விட்டு அவ்விடம் விட்டு வெளியே நடந்தான்.

சுலக்ஷணை வேலைக்காரர்களைக் கூப்பிடுவதற்காகக் கட்டப்பட்டிருந்த மணியைப் பலமாய் அடித்தாள். இரண்டுவேலைக்காரர்கள்

ஓடிவந்தார்கள். அவர்களைப்பார்த்து அவள் சொல்லுகிருள், "அந்த மனிதனை வீட்டைவிட்டு வெளியே கொண்டுபோய்விடுங்கள். அவனை இனிமேல் ஒருபோதும் இந்த வீட்டிற்குள் நுழைய விடாதிர்கள்."

"ஆம்; அவனை உதைத்துத் தள்ளுங்கள்," என்று மதிமான் கோபாவேசத்துடன் சொன்னுன். தன் வாயில் வந்தபடியெல்லாம் கங்காதானைத் தூஷணமாய்ப் பேசினுன்.

கங்காதரன் மிகவும் அமைதியுடன் தன் பிரம்பால் ஒவ்வொரு படியையும் தட்டிக்கொண்டு மாடியிலிருந்து கிழே இறங்கினுன்.

"அந்தக் கிழட்டு முட்டாளுக்கு இங்கேஎன்னவேலை?" என்று மதிமான் தன் தாயைக்கேட்டான்.

சுலக்ஷணா, "என்னிடம் வந்த ஒருவனை இவ்வாறு நடத்துவதற்கு உனக்கு எவ்வளவு துணிவு?"

மதிமான், "ஆனுல் நீ யேன் பைத்தியம் பிடித்தவள்போல் மணியை யடித்து வேலைக்காரர்களுக்கு அவ்விதமாய்க் கட்டளையிட்டாய்? அது கிடக்கட்டும்மம்மா சுவேதவதி நகரம் முழுவதும் காட்டு நெருப்புப்போல் பரவுகின்றதே ஒருகதை அது என்ன? சிந்தாமணி உன்னை இச்சித்தானு? இப்படிப்பட்டவர்களுடன் சகவாசம்செய்வதின் பலன் உனக்கு இப்பொழுது தெரிந்ததா? நான்எப்பொழுதும் அவனை வெறுத்தேன். வீட்டைவிட்டு உதைத்துத் துரத்திவிடலாமென்று கூட எண்ணியிருந்தேன்."

சுலக்ஷணா தன் மகனை அலக்ஷியமாய்ப் பார்த்தாளே தவிர அவனுக்குப் பதிற்சொல்லவில்லை. தனியேயிருந்து கங்காதரன் சொன்னவற்றைப்பற்றி யோஜிப்பதற்காக அவள் வேறொரு அறைக்குச் சென்றுள்.

அடுத்த அறையிலிருந்த விமலாவும் அசிதாவும் நடந்தவற்றையெல்லாம் பூராவாய்த் தெரிந்து கொண்டார்கள். ஆதிமுதற் சிந்தாமணியைப்பற்றிச் சுலக்ஷணா சொன்ன கதையை விமலா நம்பவில்லை. கங்காதரனுக்கும் தன் தாய்க்கும் நடந்த சம்பாஷணையைக்

கேட்டபிறகு அவளுக்குத் தான் முதலிற்கொண்ட எண்ணம் உறுதியாயிற்று. கங்காதரன் சுலக்ஷணாவிற்கு அவளுடைய புத்திரிகளைப் பற்றிச் சொன்னது அப்பொழுதே நிறைவேறிற்று. அவர்களுக்குத் தங்களுடைய தாய் பரபுருஷ இச்சையுள்ளவள் என்று தெரியவந்தது. தாய் கற்பில்லாதவளென்று புத்திரிகளுக்குத் தெரிந்தபோது, அவர்களும் கற்பைத் திரணமாய் மதித்தார்கள்.

மாறுவேஷம் தரித்துக்கொள்ளுதல்.

நமது கதை நடந்த காலத்தில் சுவேதவதி நகரத்தில் நூதனமான ஒரு வழக்கம் இருந்தது. பெரியகனதனவான்கள் வீட்டில் ஏதாவது விசேஷம் ஏற்பட்டால் பெரிய விருந்தொன்று நடக்கும். அதற்கு உயர்ந்த அந்தஸ்துள்ளவர்களும் பெரும்பணக்காரர்களும் ஏனையோரும் அழைக்கப்படுவார்கள். அவர்கள் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு டிக்கெட்டு (Ticket) அனுப்பப்படும். விருந்திற்குவரும் புருஷர்களும் ஸ்திரீகளும் வேடிக்கையார்த்தமாகத் தங்கள் தங்களுக் கிஷ்டமான மாறுவேடங்களைத் தரித்துக்கொண்டு வருவார்கள். முகம் தெரியாதபடி முகமூடிகளினால் மறைத்து விடுவார்கள். முகமூடிகளில் கண்களுக்கும் மூக்கிற்கும் துவாரங்கள் போட்டப்பட்டிருக்கும். விருந்தினர்கள் ஒருவர் மற்றவரை இன்னாரென்று அறியமுடியாது. ஒருவரையொருவர் தெரிந்துகொள்ளவேண்டுமென்றால் முதலிலேயே அவர்கள் போடப்போகிற மாறுவேஷம் இன்னதென்று தெரிந்து கொள்ளவேண்டும்.

இத்தகையவிருந்தொன்றிற்குச் சூடாமணி, மதிமான், சுலக்ஷணா முதலியவர்கள் அழைக்கப்பட்டிருந்தார்கள்.

விருந்து நடக்கும் வீட்டிற்கு அனேக வண்டிகள் வந்து நின்றன. சூடாமணியும் மதிமானும் ஒருவண்டியில் வந்து இறங்கினார்கள். அவர்களிருவரும் மாறுவேஷம் தரித்துக்கொண்டு முகமூடிகளைப் போட்டுக்கொண்டிருந்தார்கள். ஒரு தனியிடத்திற்குச் சென்று அவர்கள் பின்வருமாறு சம்பாஷிக்கலானார்கள்.

மதிமான், "அம்புஜம் இன்று தினம் இங்கு வருவாளா?"

சூடாமணி, "அவள் வரமாட்டாள். உடம்பிற்குச் சரியாயில்லையாம். நீ யேன் இரண்டு மூன்று தினங்களாய் அவளை வந்துபார்க்கவில்லை?"

மதிமான், "நான்வராதது என்மேல் குற்றந்தான். எனக்குப் புதிதாய் வைப்பாட்டி கிடைத்தபடியால் அவளை விட்டுவர அவகாசமில்லை."

சூடாமணி, "நீ பாலாமணியிடம் போக்குவரத்தாயிருப்பதில் எனக்கு ஒருவித ஆக்ஷேபனையுமில்லை. ஆனல் நீ அம்புஜத்தை அடிக்கடி வந்து பார்த்து விட்டுப்போகவேண்டும்."

மதிமான், "வண்டியில் வரும்பொழுது ஒருவிஷயம் சொல்லிக்கொண்டு வந்தாயே. அதை முடிக்கவில்லையே."

சூடாமணி, "யாரோ ஒரு ஸ்திரீ எனக்கு ஒருகடிதம் எழுதியிருக்கிறுள். அதில் அவள் என்னை நேசிப்பதாகவும் மாறுவேஷத்தோடு இங்கு வந்து என்னைச் சந்திப்பதாகவும் சொல்லுகிறுள். மேலும் நான் அவளைத் தெரிந்து கொள்ளுவதன்பொருட்டும் அவள் என்னைத் தெரிந்துகொள்ளுவதன் பொருட்டும், நான் தரித்துக் கொள்ளவேண்டிய மாறுவேஷத்தையும் அவள் தரித்துக்கொள்ளப் போகும் மாறுவேஷத்தையும் அந்தக் கடிதத்தில் சொல்லுகிறுள். ஆனல் அவள்தான் இன்னுரென்பதைத் தெரிவிக்கவில்லை," என்று சொல்லி அவன் சட்டைப்பையிலிருந்து ஒரு கடிதத்தை எடுத்து மதிமானிடம் கொடுத்தான்.

மதிமான், "நீ அதிர்ஷ்டசாலி இதையெழுதின ஸ்திரீயாரென்று உனக்குத் தெரிகிறதா?"

சூடாமணி, "இல்லை, எனக்குத் தெரியவில்லை. இந்த விருந்திற்கு உன் தாயாரும் சகோதரிகளும் வருகிறுர்களா?"

(தொடரும்.)

வ. வி. நடேசன்செட்டி,

ஆத்தங்குடி.

382

உ

சபைநிகழ்ச்சிக் குறிப்புகள்.

அரிமளம்.

சுந்தரஸ்வாமிகள் ரீடிங்ரூம்,

காளயுக்தி௵ ஐப்பசி௴ 2௳ (18—10—18) பிற்பகல் 3-மணிக்குஉள்ளூர் சிவன்கோவிலில் மகிபாலன்பட்டி பண்டிட் எம். சின்னையாசெட்டியாரவர்களின் அக்கிராசனத்தின்கீழ் ஒரு சபைகூட்டப்பெற்று ஸர்க்கார் ஸ்கூல் வித்தியார்த்திகளாகிய எஸ், காசிராஜா நே. பி. காசி எஸ். டி. முத்துச் செல்லப்பன் பி. மீனாள் என்ற பால்யர்கள் முறையே எல்லாம் அவன் செயல், கல்வியின் உயர்வு, சிறு தேவதைகளுக்கு உயிர்பலி யிடலாகாது, புலால்மறுத்தல், பெண் கல்வி என்ற விஷயங்கள் சவிஸ்தாரமாய் உபந்யஸிக்க ஸபாநாயகரவர்கள் மேற் கூறியவைகளுக்கு அனுகுணமான மேற்கோள்களுடன் முடிவுரை கூறியபின் சந்தனதாம்பூலாதிகள் வழங்கப்பெற்று இரவு மணி 8-35-க்குச் சபைமுடிவு பெற்றது.

(19—10—18)

மறுநாள் 3 மணிக்கு சபைகூட்டப்பட்டது. இந்நகரிலுள்ள வைசிய ஆண் பெண் இருபாலோரும் விசேஷமாய் ஆஜராயிருந்தார்கள்.

பண்டிதமணி எம். சின்னையாசெட்டியாரவர்கள் தனது ஜாதியம் முன்னேற்றமடைய நாகரீகமான சில நிபந்தனைகளை அனுசரிக்கவேண்டுமென்றும் சில புராதனமானவும் அநாகரிகமான கொள்கைகளை அறவேநீக்கவேண்டுமென வற்புறுத்தியதை சபையோர்கள் கரகோஷமூலமாய் ஆமோதித்தனர். ஷை ஜனசமூகம் நவீனநாகரிகமடைய சாதகமாய் ஸ்கூல் கட்டிடத்தில் மிகவும் எளிய நிலைமையிலிருந்த சுந்தரசுவாமிகள் ரீடிங்ரூமுக்கு ப்ரத்யேகமான கட்டிடம் கட்டி முன்னேற்றமடையத் தகுந்த சாதனங்களைத் தேடவேண்டுமென தன் சாதுர்யமான வசனங்களால் வேண்டி வாசகசாலையின் அவசியத்தை நன்குணர்ந்தசபையோர்கள் அவ்வேண்டுகோளை முற்றிலுமேற்றுக்கொண்டு இன்றியமையாத அச்சங்கத்தின் உத்தியோகங்களாகிய (President) அக்ராஸனாதிபதி, பொக்கிஷதார், காரியதரிசி முறையே ஸ்ரீமான் சி. செ. சிதம்பரம் செட்டியாரவர்கள், மு. ராம. கு. ராமஞ்செட்டியாரவர்கள், கா. சு. சி. நடேசஞ்செட்டியாரவர்கள் நிர்வகிக்க ஏற்பாடுசெய்யப்பட்டது. பின் ஷை ப்ரிஸிடெண்டு அவர்க

னால் இப்பொழுது நடைபெறும் மஹாயுத்தத்தில் பல்கேரியாநாடு சரணாகதி யடைந்ததைக் கொண்டாடவேண்டி தயாராய் சேகரித்திருந்த பரிசளிப்புச் சாமான்களை சர்க்கார் ஸ்கூல் குழந்தைகளுக்கு கீழ் சர்க்கிள் ஸ்கூல் இன்ஸ்பெக்டரவர்களால் அளிக்கச்செய்தனர்.

ஸ்கூல் இன்ஸ்பெக்டர் அவர்களின் வந்தனோபசாரத்துடன் மீட்டிங் முடிவுபெற்றது.

II தமது ஜாதியமும், இவ்ரீடிங்ரூமும், முன்னேற்றமுறச்செய்த மித்ர மணி எம். சின்னையாசெட்டியார் அவர்களுக்கு சகலசம்பத்துக்களும் உண்டாக ஈஸ்வரன் அருள்புரிவாராக.

இப்படிக்குத் தங்கள் அன்புள்ள,
கா. ச. சி. நடேசன்செட்டி,
செக்ரெடரி.

ஓம்.

காரைக்குடி.

ஹிந்துமதாபிமான சங்கத்தின் முதல் வருஷோற்சவம்.

நிகழும் காலயுக்திஞு ஐப்பசிமீ சஉ இந்தச்சங்கத்தின் முதல்வருஷோற்சவம். மதுரை பாடசாலை பரிசோதகரும், தமிழ்ச்சங்க இலக்கியகழகத்தினருள் ஒருவருமாகிய பிர்மஸ்ரீ வே. முத்துஸாமிஐயரவர்கள் எம். ஏ. எல். டி. அக்கிராசனத்தில் மிகமேன்மையாக நடைபெற்றது.

காலை 8-30 மணிக்கு அக்கிராசனாதிபதியவர்களை அங்கத்தினர் முதலியோர் இதற்காக அலங்கரிக்கப்பெற்ற அழகியகொட்டகைக்கு வாத்தியகோஷங்களுடன் அழைத்துக்கொண்டுவந்தார்கள். ஸ்ரீ மீனாக்ஷிசுந்தரேஸ்வர வித்யாசாலை மாணவர்களால் கடவுள் வாழ்த்து பாடப்பெற்றது. பின்னர் அக்கிராசனாதிபதியவர்கள் ஆசனத்திலமர்ந்தவுடன் ஸ்ரீமாந் சா. நா. சா. தெ. நடேசன்செட்டியாரவர்கள் வந்தனோபசாரப்பத்திரம் படித்துக்கொடுத்தார்கள். ஸ்ரீமாந் அழ. அருணாசலஞ்செட்டியாரவர்களால் முதல் வருஷ அறிக்கை படிக்கப்பெற்றது. பின்னர்த்தலைவரவர்கள் முன்னுரையாக "இந்தசங்கம் நிகழ்ந்த ஒருவருஷத்தில் நல்லவேலைகளைச் செய்திருக்கிறதென்றும், வரும்படியைக்காட்டிலும் அதி

சச்செலவுசெய்திருக்கிறதென்றும், ஆனால் அதிகமான தொகை இருப்பு இருக்கிறதென்றும், இம்மாதிரி சங்கங்கள் பல நம் நாட்டிற்கு வேண்டியது அவசியமென்றும், இவ்வூர்வாசிகள் இதை நன்கு ஆதரித்து அபிவிருத்திக்குக் கொண்டுவரவேண்டுமென்றும், கூறினார்கள். அதன் பின்னர் இவ்வூர் கம்ப ராமாயணப்பிரசாரகரும் "வித்தியாபாநு" ப்பத்திராதிபருமான பிர்மஸ்ரீ மோ. வே. கோவிந்தராஜஅய்யங்காரவர்கள் "கம்பர் கவித்திறம்" என்னும் விஷயத்தையும், மதுரை "விவேகோதயம்" பத்திராதிபர் பிர்மஸ்ரீ ம. கோபாலகிருஷ்ணஅய்யரவர்கள் சுவாமி விவேகாநந்தரின் சந்யாசி கீதத்தின் மொழிபெயர்ப்பை" யும்; அளகாபுரி ஸ்ரீ வி. ராமய்யா அவர்கள் "உண்மை" யென்னும் விஷயத்தையும், சபையோர்க்கு மகிழ்வும் பக்தியும் வீரமும் பெருகுமாறும், பொய்மையகலுமாறும், இனிமையாக உபந்யஸித்தார்கள். தலைவரவர்கள் அபிப்பிராயம் உரைத்தார்கள்.

பின்னர் பகல் 3 மணிக்கு சபைகூடியது. ஆண் பெண் இருபாலாருமாக சுமார் 1000 ஜனங்கள் கூடியிருந்தனர். ஸ்ரீ மீனாக்ஷிசுந்தரேஸ்வர வித்தியாசாலை மாணவர்களால் கடவுள்வாழ்த்து பாடப்பெற்றது. அக்கிராசனாதிபதியவர்கள் ஆசனத்தில் அமர்ந்ததும் கண்டனூர் ஸ்ரீமான் தெ. அரு. சித. இராமநாதன்செட்டியாரவர்கள் "சகோதரத்வம்" என்னும் விஷயத்தையும், சௌபாக்கியவதி காவேரியென்னும் தனவைசியச்சிறுமி "சிநேகம்" என்னும் விஷயத்தையும் சபையோர் மகிழுமாறு மிக இனிமையாக உபந்யஸித்தார்கள். பிறகு சிற்றுண்டி எல்லோருக்கும் அளிக்கப்பெற்றது. அதன் பின்னர் சபைகூடியது. மகிபாலன்பட்டி ஸ்ரீமாந் மு. சின்னையாசெட்டியாரவர்கள் "இல்லறதர்மம்" என்னும் விஷயத்தைப்பற்றியும், மதுரைக்காலேஜ் தமிழ்ப் பண்டிதர் பிர்மஸ்ரீ ம. கோபாலகிருஷ்ணய்யரவர்கள் "மதுரை அரசன் விஸ்வநாத நாயக்கன் சரித்திரத்தை" யும், புதுவயல் பிர்மஸ்ரீ ஆர். மீனாக்ஷிசுந்தரமையரவர்கள் "விவேகாநந்தரும் ஹிந்துமதமும்" என்னும் விஷயத்தையும் சங்கத்தின் வெளியூர் பிரசங்கியார் பிர்மஸ்ரீ கெ. சி. விஸ்வநாதசாஸ்திரிகள் "ஓங்காரத்தின் பெருமை" யென்னும் விஷயத்தையும், மிக இனிமையாகவும் உருக்கமாகவும், உபந்யஸித்தார்கள் பின்னர் அக்கிராசனாதிபதியவர்கள் அபிப்பிராயம் கூறினார்கள்.

தற்காலம் நடைபெறுகிற ஐரோப்பிய மகாயுத்தத்தில் நேசக்கக்ஷியார் எல்லாப்போர்முனைகளிலும் ஜெயமடைந்து வருகிறதைப்பற்றியும், பல்கேரியா நம்மிடம் சரணடைந்ததைப்பற்றியும், சந்தோஷப்படுவதோடு கூடியசீக்கிரம் நமது நேசக்கக்ஷியார் சத்ருக்களை வெற்றிபெறவேண்டுமென்று ஜகதீஸ்வரனைப் பிரார்த்திப்பதாகத் தீர்மானித்து அதனை மாக்ஷிமைதங்கிய நமது சென்னை கவர்

ளாவர்கட்கு அனுப்பப்பெற்றது. அதன் பின்னர் ஸ்ரீமாந் சொ. முருகப்ப செட்டியாரவர்கள் சபையோர்க்கும், உபந்நியாசர்கட்கும் வந்தனங்கூறினார்கள். உபந்நியாசகர்கட்கு பூமாலை சூட்டப்பெற்றது. சபையோருக்கு சந்தனமும் "பிரணவகோஷம்" "ஈசுவரபக்தி" யென்னும் இரண்டுசபைப் பிரசுரங்களும் அறிக்கைப்பத்திரம் வந்தனோபசாரப்பத்திரங்களும் வழங்கப்பெற்றன. சங்கத்தின் அங்கத்தினருள் ஒருவரான ஸ்ரீமாந் தெ. பழ- ளா. குழந்தையன் செட்டியாரவர்களால் "இந்தியக்கும்மி" 400 பிரதிகள் சபையோர்களுக்கு இனமாக வழங்கப்பெற்றன. பின்னர் ஸ்ரீ மீனாக்ஷிசுந்தரேஸ்வர வித்யாசாலை மாணவர்களால் ராஜவாழ்த்து கடவுள்வாழ்த்து கூறப்பெற்றன.

சுபம்.

பிர்மஸ்ரீ வே. முத்துசாமி ஐயரவர்கள் பாடிய வாழ்த்துப்பாக்கள்,

கான முந்து காரையில்
வான இந்து வளரொளி
மான இந்து மதஅபி
மான சங்கம் வாழ்கவே.

பொங்கிரு பொருளுஞ் சேரும் புகழ்மிகு நகரத் தாரால்
இங்கெழி லோங்குங் காரை இந்துமத அபி மான
சங்கமும் அதனைப் போற்றும் தகைமைசால் மாந்தர் யாரும்
மங்கள முற்று வாழ்க வண்டமிழ் வயங்க மாதோ.

மதாபிமானி.

ஸ்ரீ மார்த்தாண்டசபை

(வாசகபுத்தகசாலை)

ஆலங்குடி.

15—11—18

இன்றுகாலை 9-மணிக்கு, மகா-ா-ா-ஸ்ரீ வி. கோவிந்தஸாமிநாயுடு பி. ஏ. அவர்களின் அக்கிராஸனத்தின் கீழ் "7-வது ஆண்டுநிறைவுவிழாவை," கொண்டாடும் பொருட்டு, அங்கத்தினர்களுமல்லாதவர்களுமாய் சுமார் 100

ஜனங்கள் கொண்ட, மகாஸபைகூடிற்று. கடவுள் வாழ்த்துமாணவர்களால் பாடப்பட்டவுடன் காரியதரிசி சபையின் அபிவிர்த்தியைக்குறித்து நீண்டதோர் அறிக்கைப்பத்திரம் படித்தார். ("இச்சபையானது சமஸ்தானத்திலிதுபோன்ற சபைகள் ஏற்பட்டதற்கும், இந்நிகழ்ச்சிபரவுவதற்கும், வழிகாட்டியாய் இருந்து வருகிறதென்றும், அங்கத்தினர்கள், புஸ்தகங்கள், இத்துரைகளில் அபிவிர்த்தி கடந்த 4 வருடங்களில் ஜாஸ்தியென்றும், தென்னிந்தியாவிற்கே முதன் முதலாய் இச்சபையினுதரவில் "வாசகப்புத்தகசாலை மகாநாடு," 25—1—18ல் கூட்டப்பட்டதென்றும், அம்மகாநாடானது இரண்டாம்தடவை புதுக்கோட்டை "சமரசசன்மார்க்கத்தமிழ்ச்சங்கத்தின்" ஆதரவில், கூடப்போகிறதென்றும் எடுத்துரைத்தார்") பின்னர் அக்ராசனாதிபதியவர்கள், அறிக்கைப்பத்திரத்திற் கண்ட சங்கதிகளுக்குத் தகுந்தவாறு முகவுரை கூறியதும், பிர்மஸ்ரீ எம். ஆர். ராமஸாமி அய்யர் அவர்கள் "தமிழ்பாஷையின் சிறப்பும், வாசகப்புத்தகசாலைகளின் தற்காலநிகழ்ச்சியும்" என்ற விஷயத்தைப்பற்றி பற்பல மேற்கோள்களுடன் உபந்யவித்தார்கள். அக்ராஸனர் உபந்யாஸத்தைக்குறித்து அபிப்பிராயங்கூறியதும் காரியதரிசியால் அவர்களுக்கு வந்தனோபசாரம்கூறப்பட்டு மாலையும் போடப்பட்டது.

(மாலை 2 pm 200 பேர்கள்வரை கூட்டம்.)

மகா-ா-ா-ஸ்ரீ எம். ஆர். ராமஸாமி அய்யர்அவர்கள் அக்கிராசனத்தின் கீழ், ஸ்ரீமான்களாகிய, ஏ. எஸ், முத்துகிருஷ்ணய்யர், கோகரணசாஸ்திரிகள் உடையப்பசெட்டியார், ஜி. சுப்பையாவையர் இவர்கள் முறையே "கேள்வி முயல்," "சத்சங்கம்," "தர்மம்," "மானிடப்பிறப்பின்பயன்," "பாதுகாபட்டாபிஷேகம்" என்ற விஷயங்களைப்பற்றி, பற்பலமேற்கோள்களுடன், சபையோர் ஆனந்திக்கும் வண்ணம் 6-30மணிவரை உபந்யவித்தார்கள். உபந்யாஸங்களுக்கு விரிவாக அக்ராஸனர் அபிப்பிராயங்கூறியதும் மகா-ா-ா-ஸ்ரீ சி. மு, சிதம்பரஞ்செட்டியார் அவர்களை சபையோர் "ஸ்ரீமார்த்தாண்டசபையின்," உபஅக்ராஸனாதிபதியாகத்தேர்ந்தெடுத்தனர். அக்ராஸனர் ஆண்டு நிறைவுவிழாகடவுள்கிருபையால் நன்குநடைபெற்றதென்றும், மென்மேலும் விர்த்தியடைய கடவுளருள்புரியவேண்டுமென்று மாசிகூறியதும், காரியதரிசி எல்லோருக்கும் வந்தனோபசாரம்கூறி தலைவர்க்குமாலைசூட்ட, ராஜவாழ்த்துப் பாக்கள்பாட சபையானது 7-30 மணிக்குக் கலைந்தது.

சுபம்! சுபம்!! சுபம்!!!

ஸ்ரீமார்த்தாண்டசபை
ஆலங்குடி.
16-11-18

A. S. முத்துகிருஷ்ணன்
காரியதரிசி,

—:(o):—

குன்னூர் ஸ்ரீலஸ்ரீ
ஆனந்தாச்சிரமம், சிவத்தியாநந்த மஹாரிஷி, யவர்களால் வெளியிடப்பெற்ற ரிக்வேத மொழிபெயர்ப்பைப் படித்துப்பார்த்து ஷையார்களது சமூகத்துக்கு எழுதியனுப்பிய செய்யுட்கள்.

சுந்தரஞ்சேர் மொழிபெயர்ப்புஞ் சுவைதிகழும் மொழியமைப்புஞ் சொற்க
(ளெல்லாம்
கொந்தலர்கற் பகநாணப் பலபொருளைக் கொண்டொளிரும் பாகு படும்
முந்துமொரு நூலிதைப்போ லில்லையென வெல்லாரும் மொழிந்து நிற்பச்
செந்தமிழ்ச்சிந் தாமணியாய்ச் சிறப்பித்தான் சிவத்யானு னந்தச்செல்வன் (1)

பரம்பரையாய்த் தமிழ்படித்த சிலர்மனமும் களிகூரப் பண்பு நாட்டிப்
பெரும்புவிக்கோ ரணிகலமாய்த் தமிழ்ப்பாவால் வேதமதைப் பிறங்க வைத்
தான்
தரம்பெறுநன் மதுரமொழிச் சல்லாபன் சொற்பலிதந் தமைந்து நிற்போன்
பொருந்துறுமோ வேதமது மற்றவருக் கென்றிருந்தார் பொழுதொ ழித்
(தோன் (2)

இன்னநாட் டினிலெவரோ யிதுகாறும் வேதமதை யெடுத்து நின்றார்
முன்னமெதென முன்னமெதென மேலுரையே பலநாளும் மொழிந்து நின்றோம்
அன்னதொரு வகிவேகக் கோதுரையின் முட்டறுத்தா னறிஞ ரெல்லாம்
பண்ணறிய பாக்கியத்தை யிருகாத்தாற் பெற்றபெரும் பான்மையாமே. (3)

இங்ஙனம்,

30—10—18. சு. முரு. இராமசாமிபிள்ளை.

பாங்க், குன்னூர்.

மதிப்புரை.

ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸ விஜயம்.

இப்பெயர்கொண்டதொரு சிறுபுஸ்தகம் நமது பார்வைக்குக் கிடைத்தது. இது, காரைக்குடி ஹிந்துமதாபிமான சங்கத்தாரால், ஞானபாநுப்பத்திரிகையிலிருந்து எடுத்து வெளிப்படுத்தப்பெற்றது. இது இனமாகவே அளிக்கப்பெறும் சிறுபுத்தகம். இச்சங்கம், தனதுபெயருக்கிணங்கமதக்கொள்கைகளை யுள்ளூரிலும் வெளியூரிலும் சமயம் வாய்த்தபோது, தனதுபிரசாரகர்களைக்கொண்டு பிரஸங்கம்புரிவித்துத் தம்மதக்கொள்கைகளை யறியாத இந்துக்கட்கு அவற்றை

அறிவித்தும், இதரமதப்படுகுழியில் விழுந்துவிடாதபடியாகத் தெளிவித்தும் உலக உபகாரமான காரியங்களைத் தன்அளவில் செய்துகொண்டு வருகின்றது.

புஸ்தகம் வேண்டுமவர் அவர்கட்கு எழுதிப்பெற்றுக்கொள்ளலாம்.

சாந்திவசனம்

இதனது மூன்றாவது தொகுதியின் இரண்டுமூன்று பகுதிகள் வரப்பெற்றோம். இவற்றுள், மோக்ஷம் அல்லது வீடுபெறல், பிரஹ்மஞான சபையும் சகோதரபாவமும், ஸ்தூலப்பபஞ்ச தர்மங்கள் ஆத்மதர்மங்கள் என்னும் விஷயங்கள் தக்கமேற்கோளுடன் விவரமாகவும் விளக்கமாகவும் எழுதப்பெற்றிருக்கின்றன. இவை தஞ்சைஜில்லா பேராவூர் போஸ்டைச்சேர்ந்த திருமியச்சூர் சாந்தியாச்ரமத்திலிருந்து வெளியாகின்றன. இவற்றால் கிடைக்கும் வருமானங்கள் அவ்வூரில் ஸ்தாபிக்கப்பெற்றிருக்கும் தர்மக்கல்விச்சாலைக்கு உபயோகமாகின்றன. இதனை ஆஸ்திகர்கள் ஆதரிப்பார்களென்று நம்புகிறோம். வேண்டுமவர் அச்சபையாருக்கு எழுதிப்பெற்றுக்கொள்ளலாம்.

பத்திராதிபர்.

விளம்பரம்.

கோயமுத்தூர்,

சி. வி. வெள்ளச்சாமிசெட்டியார் இறந்துவிட்டதன் காரணமாக, நாளிது 8—11—18. வெள்ளிக்கிழமையன்று ஒரு முனிஸிபல் எலெக்ஷன் செய்யப்பெற்றது; மிஸ்டர் A. R. L. V. நடராஜன் செட்டியார் அவர்களும் மிஸ்டர் V. வெள்ளிங்கிரிச்செட்டியார் அவர்களும் காண்டிடேட்டுகளாக நின்றார்கள். வேண்டுகை இருதிறத்திலும் ஊக்கமாகவே நடைபெற்றன. நியாயம் அதிகக் கூர்மையாக எதிர்பார்க்கப்பட்டது. சீட்டுப்பெட்டி நேற்றையமாலையில் திறக்கப்பெற்று முடிவும் வெளிப்படுத்தப்பெற்றது. மிஸ்டர் நடராஜன்செட்டியாருக்கு 108 ஓட்டுகளும் மிஸ்டர் வெள்ளிங்கிரிச்செட்டியாருக்கு 54 ஓட்டுகளும் கிடைத்தன. வரிசெலுத்துவோர்க்குள் பெருத்தசந்தோஷமும் திருப்தியும் நடமாடுகின்றன. மிஸ்டர் நடராஜன்செட்டியார் அவர்கள் வயதும் ஊக்கமுமுடையவராக இருக்கிறபடியால், தமக்குக் கிடைத்துள்ள இக்கண்ணியமான காரியத்துக்கு யாதொரு தாழ்வும் வாராமல்நடந்து, தம்மை நியமித்தவர்களுடைய எண்ணத்துக்கேற்ப முழுநம்பிக்கையுடன் தமது காரியத்தை நிர்வஹிப்பாரென்பது நம்பப்படுகிறது.

12—11—18 ——— ஒரு நிருபர்.